பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 12 28-09-94 புதன்கிழமை ஓசை 222

## ஆகஸ்ட் 1 முதல் அரச ஊழியருக்கு சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல அரச ஊழியர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் அறிவிக்கப்பட்டபடி சம்பள உயர்வை வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கான உத்தரவு எமக்கு கொழும்பில் இருந்து கிடைத்துள்ளதாக யாழ். செயலக பிரதம கணக்காளர் நமது நிருபரிடம் தெரிவித்தார். இதன்படி கடந்த ஆகஸ்ட் மாதம் முதலாம்திகதியில்இருந்து சகல அரசஊழியர்களுக்கும் சம்பளஉயர்வை வழங்க தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யுத்த நிறுத்தம் குறித்து பிரதமர் சந்திரிகா இராணுவ அதிகாரிகளுடன் பேசுவார்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தவும் கட்டம் கட்டமாகப் பேசிவருகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் யுத்த நிறுத்தம் செய்வது குறித்து, இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுடன் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே சமயம், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த ஏற்கனவே யுத்த நிறுத்தம் குறித்து ராணுவ உயர் அதிகாரிகளுடன் கட்டம் கட்டமாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து தெரியவருவதாவது: ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக யுத்த நிறுத்தம் தொடர்பான தீர்மானம் எடுப்பதில் அரசாங்கம் கொண்டுள்ள ஆர்வமே இச் சந்திப்புக்களுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே சமயம் விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் உத்தியோக பூர்வ பேச்சுக்களை ஆரம்பிக்க முன்பாக யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுவதற்கு பாதுகாப்பு படையினரின் உயரதிகாரிகளுடன், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கட்டங் கட்டமாக பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகவும் தெரியவருகின்றது.

இதன் அடுத்த கட்டமாகவே பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவும் விரைவில் இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இறுதி முடிவெடுப்பார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கற்பிட்டியில் புலிகளின் தாக்குதல் மற்றும் கிழக்கில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை வெறியாட்டத்தினால் இரு மீனவர் பலி; இருவர் காயம்

### பருத்தித்துறைக் கடற்பரப்பில் சம்பவம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய வெறியாட்டத்தில் இரண்டு மீனவர்கள் பலியாகினர், மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

கடற்படையினரின் இத்தாக்குதல் நேற்றுக்காலை 6 40 மணியளவில் நடைபெற்றது. இதன்போதுகாங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்தகடற்படையினர் ஒருமைல் தூரத்தில் கட்டுமரத்தில் சென்று தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் பருத்தித்துறை முனை வெளிச்ச வீட்டைச் சேர்ந்த இருதயநாதன் றொபின்சன்

(6ஆம பக்கம் பார்க்க)

## நான்குமீனவ இளைஞர்கள் கடற்படையால் கைது

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு - கிழக்கு கடற்பகுதியில் தொழில் செய்துகொண்டிருந்த மீனவ இளைஞர்கள் நால்வரை கடற்படையினர் கைதுசெய்து பின்னர் சில மணிநேரத்தில் விடுவித்த சம்பவம் ஒன்று நேற்று நிகழ்ந்தது.

வெற்றிலைக் கேணியில் இருந்து காங்கேசன்துறை நோக்கி காலை 6.40 மணியளவில் ரோந்து சென்றகடற்படையினர் குடத்தனையில் ஒருவரையும், பருத்தித்துறை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உயரதிகாரிகளுடன் பேசுவதைவிட சிப்பாய்களுடனேயே பேசவேண்டும்

### உயர் மட்டத்திற்கு போர் பற்றி தெரியாது

(கொழும்பு)

அரசு இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்து காரிகள் தெரிவித்ததாக சண்டே லீடர் பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் சிப்பாய்களின் போர். முன் அரங்கில் உள்ளவர்களே உயிரை இழக்கின்றனர்.

வீரவணக்கம்



## வடக்கு - கிழக்கு அரச அதிபர்கள் பலர் பதவி விலகவேண்டி வரலாம்

### யாழ். அரச அதிபரின் நிலையும் கேள்விக்குறி

(யாழ்ப்பாணம்)

பணிபுரிபவர்களின் இடங்களுக்கு புதியவர்களை நியமிக் சிலர் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் செய்திகள்

அரசு இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதை விட சாதாரண இராணுவச் சிப்பாய்களுடனேயே பேசவேண்டும். அப்போது தான் உண்மையான கள நிலைமை தெரிய வரும் என வவுனியாவில் உள்ள கள அதி

சண்டே லீடர் பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ உயர் மட்டத்திற்கு உண்மையில் என்ன நடக்கின்றது என்பது தெரியாது. உண்மையில் இது

அரங்கில் உள்ளவர்களே உயிரை இழக்கின்றனர். கொழும்பில் இருக்கும் உயர் அதிகாரிகளுக்கு இது தெரிய நியாயமில்லை எனவும் அவ் அதிகாரிகள் குறிப்பிட்டதாக இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

# இனப்பிரச்சினை தீர்விற்கு இந்திய உதவி பெறவேண்டும்

## காமினி திசநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும் இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இதற்குப் பெறப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

இதுகுறித்து சென்ற வாரம் இந்திய தூதுவராலய உயர் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது காமினி திசாநாயக்கா வற்புறுத்தியுள்ளார் என 'யுக்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் இன்னும் அமுலில் உள்ளது எனவும் ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றி பெற்றால் ஒப்பந்தத்தை அமுல் படுத்த தனக்கு ஒத்துழைப்புத் தருமாறும் காமினி திசாநாயக்கா இந்திய அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்க்க பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவினால் முடியாது எனவும், தன்னால் மட்டுமே அது முடியும் எனவும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியவுடன் முதல் வேலையாக இனப்பிரச்சினையைத் தீர்க்க முயலப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ரணிலை கட்சியிலிருந்து அகற்ற காமினி திசாநாயக்கா முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் அவருக்கு ஆதரவான குழுவினரையும் வெளியேற்றும் முயற்சிகளில் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா ஈடுபட்டு வருவதாக ராவய தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஐ தே. கவின் பின்னடைவு எதிர்பார்க்கப்பட்ட போதும், காமினி திசாநாயக்கா, கட்சியில் பிளவை ஏற்படுத்த இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவது வியப்பைத் தருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

# பிரச்சினை தீர்வு முயற்சிக்கு தடையாக இருக்கமாட்டேன்

## ஜே. ஆர். கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கின் பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளுக்கு ஒரு தடையாக நான் இருக்கமாட்டேன் என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

திவயின பத்திரிகைக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)



லெப். கோபிநாத் (கோபி)

நேற்று முன்தினம், அதிகாலை 2 மணியளவில் யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் சாவடைந்தார்.

லெப். கோபிநாத் [கோபி (சின்னத்தப்பி சேதுகுமார் மட்டக்களப்பு) என்னும் இப்போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்

# சிற்றூர்தி சேவை இல்லை

கற்பிட்டி கடற்பரப்பில் வீரகாவியம் படைத்த கடற் கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு நாளை சிற்றூர்திச் சேவை நடைபெறமாட்டாது என யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

(யாழ்ப்பாணம்)

அறுபது வயதிற்கு மேற்பட்டும் சேவை நீடிப்பில் அரச பதவி வகிப்பவர்களின் பணிகளை உடனடியாக நிறுத்துவதான அமைச்சரவையின் முடிவையடுத்து, வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள பல அரசாங்க அதிபர்களின் சேவை நீடிப்பு இரத்துச் செய்யப்பட்டு, அவர்கள் பதவி நீக்கப்படலாம் என தெரிய வருகின்றது.

இதனடிப்படையில், வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களில் அரசாங்க அதிபர்களாக சேவை நீடிப்பின் அடிப்படையில் பணிபுரிபவர்களின் இடங்களுக்கு புதியவர்களை நியமிக்கப்பட உள்ளதாகவும் வேறு சிலர் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் செய்திகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிமானியின் கோரிக்கை பிரதமரால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மறைந்தகணவரின் அமைச்சில் செயலாளராகப் பணிபுரிந்த முன்னாள் செயலாளர் ஒருவரை தமது புதிய அமைச்சில் செயலாளராக நியமிக்க வேண்டும் என்ற சிறிமானி லலித் அத்துலத்முதலியின் கோரிக்கை சந்திரிகாவால் நிராகரிக்கப்பட்டது.

பதவி ஏற்ற புதிதில்போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மகளிர் விவகாரம் சூழல் அபிவிருத்தி அமைச்சர் சிறிமானி அத்துலத்முதலி தமது கணவர் உயர் கல்வி அமைச்சராக பதவி வகித்த சமயம் அவரின் செயலாளராக டீமெல் என்பவர் பணிபுரிந்துள்ளார்

[6ஆம் பக்கம் பார்க்க]

## கடலரசனைத் தகர்த்தெறிந்த

# கடற் கரும்புலிகளின் உருவப்படங்கள் இன்று கோட்ட ரீதியாகப் பவனி

கற்பிட்டிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் கடலரசன் கப்பலைத் தகர்த்து மூழ்கடித்துவீரகாவியம் படைத்த கரும்புலிகளின் உருவப் படம் தாங்கிய ஊர்திகள் இன்றும் நாளையும் வலிகாமம் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கோட்டங்களில் தனித் தனியாக பவனியாக எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இடையிடையே கூட்டங்களும் இடம்பெறவுள்ளன. இக்கடற் கரும்புலி மாவீரர்களுக்கு வீதிகள் தோறும் ஊர்திகள் வரும் போது மக்கள் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

### வடமராட்சி கோட்டம்

வடமராட்சிக் கோட்டத்தில், ஊர்தி பவனி இன்று காலை 9.30 மணியளவில் உடுத்துறை வேம்படிச் சந்தியில் ஆரம்பமாகும். அங்கு நினைவு உரைகளைத் தொடர்ந்து, மருதங்கேணி வடக்குச் சந்தி, தாளையடி சென்று

[6ஆம் பக்கம் பார்க்க]

# போரதீவு முகாமிலிருந்து 30 படையினர் தப்பி ஓட்டம்

[கொழும்பு]

மட்டக்களப்பு போரதீவு சிறிலங்கா இராணுவமுகாமை சேர்ந்த முப்பது இராணுவத்தினர் திடீரென தலைமறைவாகியுள்ளனர்.

''பிளாட்டூன்116'' ஐச் சேர்ந்த இராணுவத்தினரே இவ்வாறு தலைமறைவானதாகவும் இவர்கள் அம்பாறை மாவட்டத்திற்குள் ஒளிந்து கொண்டுள்ளதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து விசேட இராணுவப்பொலிஸ் அணி வரவழைக்கப்பட்டுதேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் சேவை

(6 ஆம் பக்கம் பார்க்க]

# ராணுவத் தளபதி பலாலி வந்த பின்பே தாக்குதல்

(கொழும்பு)

இராணுவ தளபதி ஜெரிடி சில்வா தலைமையிலான உயர்மட்ட இராணுவ குழுவொன்று பலாலி வந்து சென்ற பின்னரே இராணுவத்தினர் அச்சுவேலிப் பகுதியில் ஜெயகந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### அலுவலக மேசை உபகரணம்

அலுவலக மேசைக்கு எழிலூட்ட, வேலைக்கு இதமூட்ட, குண்டூசி, கிளிப்புகளுக்குரிய தனித்தனி கிண்ணங்களோடு, பென்சில், பேனை வசதியாக வைப்பதற்கு முற்றிலும் எவர் சில்வரில் வடிவமைக்கப்பெற்ற சாதனம். தனியாகவோ, மொத்தமாகவோ விற்பனைக்குள்ளது. ''மிக்வைற்'' (சி-10418)

### தவறிவிட்டது

பாவித்த பிலிம் றோல்கள், முக்கிய பத்திரங்களுடன் பார்சல் ஒன்று அல்லிப்பளை இறங்கு துறையில் இருந்து பூநகரி செல்லும் வழியில் 20-9-1994 இல் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சி. குணரத்தினம் புகையிரத நிலையவீதி பளை. (9527)

### நினைத்தாலே இனிக்கும்

மணலாறு கச்சான் அல்வா சுத்தமானது, சுவையானது அனைவரும் விரும்பிச் சுவைப்பது. உற்பத்தியாளர் பாரதி சிறுகைத்தொழில் நிறுவனம், சம்பியன் லேன் கொக்குவில். எல்லா இனிப்பு வியாபாரிகளிடமும் பெற்றுக் கொள்ளலாம். (9506)

### விற்பனைக்கு

சப்புப்பலகை பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. 4'- 3' 2½' தொடர்பு:- டாக்டர் ம. சிற்றம்பலம் பெரியரசடி சாவகச்சேரி. (9528)

### காணவில்லை

அச்சுவேலி கதிரிப்பாய் பகுதியில் அண்மையில் இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையை தொடர்ந்து தொண்ணூறு வயதான மூதாட்டி ஒருவர் காணாமற் போயிருப்பதாக கூறப்படுகிறது. அச்சுவேலி இடைக்காடு பகுதியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை பொன்னாச்சி என்பவரே கதிரிப்பாயிலிருந்து காணாமற் போயிருப்பதாக கூறப்படுகின்றது.

### கலந்துரையாடல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து பத்திரிகை, சஞ்சிகை விநியோகஸ்தர், மற்றும் விற்பனையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை ஒன்பது மணியளவில்

## க. பொ. த. (உயர்தர) பாடங்களில் மாற்றம் பற்றி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகரகம தேசிய கலவி நிறுவனத்தில் க. பொ. த (உயர்தர) பாடங்களில் மாற்றங்களை கொண்டு வருவதற்கான ஆய்வு மாநாடு ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

க. பொ. த. உயர்தர பரீட்சையில் விடைத்தாள்களை திருத்தும் வேலைகளில் தற்போது ஈடுபட்டவர்களில் பலரும் இம் மாநாட்டில் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது நிலவயான பாடத்திட்டம் வகுக்கப்படுவது மற்றும் பல பாடங்களில் புதிய பகுதிகளை சேர்ப்பது என்பன பற்றி இங்கு கொள்கையளவில் ஆராயப்பட்டுள்ளது.

இதே வேளை சில பாடங்களில் சிலபகுதிகள் நீக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது இவ் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் பாதிக்கப்படாத வகையில் இம்மாற்றம் கொண்டுவரப்பட இருப்பதாக கூறப்படுகிறது.

இப் பாடவிதான மாற்றம் தொடர்பாக விரிவான கருத்தரங்குகளை மாவட்ட அடிப்படையில் விரைவில் ஏற்படுத்தப்படலாம் எனவும், அநேகமாக டிசம்பர் மாத விடுமுறை காலங்களில் இது மேற்கொள்ளப்படலாம் எனவும் தெரியவருகிறது. [நி]

## விருதுகள் விழா 1994

யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அவையால் விளையாட்டு வீரர்களுக்கான வருடாந்த விருதுகள் வழங்கும் விழாவானது இன்று புதன்கிழமை பிற்பகல் 3 30 மணி அளவில் பல்கலைக் கழக கைலாசபதி கலைஅரங்கில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் கு. குணரட்ணம் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். இதில் கலை நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெறவுள்ளது.

## படையினர் துப்பாக்கிச்சூடு ஓமந்தையில் சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஓமந்தையை சேர்ந்த சிறுவன் படுகாயம் அடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓமந்தையை சேர்ந்த கோபாலசிங்கம் ருக்மன் (வயது 13) என்ற சிறுவனே படுகாயம் அடைந்தவர் ஆவார். இவர் ஓமந்தையில் தனது வீட்டிற்கு பின்புறம் அதிகாலையில் விறகு வெட்ட சென்ற போது பதுங்கி இருந்த இராணுவத்தினர் இவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர். (நி)

## ரயில் பாதை அமைப்பதால் சூழல் பாதிப்பு ஏற்படுமா?

- கிழக்குபல்கலைக்கழகம் ஆய்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முதல் பொத்துவில் வரை புகையிரதப் பாதையை விரிவாக்குவது மூலம் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக மதிப்பீடு ஒன்றை கிழக்கு பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் மனோ. சபாரத்தினம் தலைமையிலான ஆய்வுக் குழு இம் மதிப்பீட்டை மேற்கொள்கிறது. புகையிரத திணைக்களம் வழங்கியுள்ள நிதியை பயன்படுத்தி மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் இம் மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

## பனைமரம் தறிப்பதற்கு அனுமதி பெறல் வேண்டும்

பனை மரம் தறிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அவ்வவ் பகுதியில் உள்ள வட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். அப்படிவத்தினை பூர்த்தி செய்த பின்னர் கிராமிய உற்பத்திக் குழுவின் சிபார்சுடன் அரசியல் துறை வட்டப் பொறுப்பாளரிடம் உறுதிப்படுத்தி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட பொறுப்பாளரின் அனுமதியுடன் பனை மரம் ஒன்றுக்கு ரூபா 20/- வீதம் பனை வள நிதியினை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினையும் பனை தறிப்பதற்கான அனுமதிப் பத்திரத்தினையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

பனை மரம் தறிக்கப்படும் இடத்தில் பனை தறிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தினை வைத்திருத்தல் வேண்டும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

அவ்வாறு அனுமதியின்றி பனை மரம் தறிக்கப்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பனை மரம் ஒவ்வொன்றுக்கும் 1000/- ரூபா வீதம் அபராதம் விதிக்கப்படுவதுடன் பனை மரமும் பறிமுதல் செய்யப்படும் எனவும் பட்ட பனை மரங்களுக்கு அனுமதி பெற தேவையிலலை எனவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேலும் தெரிவிக்கிறது.

## 15 வது ஆண்டு பூர்த்திவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி அதன் 15வது ஆண்டுப் பூர்த்தி விழாவை வங்கி முகாமையாளர் திரு. க. கமலசேகரம் தலைமையில் எதிர்வரும் 29-ம் 30-ம் திகதிகளில் கொண்டாடுகின்றது. 30-ம் திகதி பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமம்நான்கு ஏழைச் சிறுவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியில சிறுவர் அறக் கொடைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது. இது வரை சேவாச்சிரமம் சுமார் 50,000 ரூபாவை ஏழைச் சிறுவர் அறக்கொடைத்திட்டத்தில் முதலீடு செய்துள்ளது. (25)

## பிரத்தியேக வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் பாடசாலையில் பயிலும் உயர்வகுப்பு மாணவர்களுக்கென பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவின் தீவகக் கோட்டத்தினரின் மேற்பார்வையில் ''கதிரவன்'' கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் நடத்தப்படும் இவ் வகுப்புகள் வாரத்தில் திங்கள், புதன், வியாழன் ஆகிய மூன்று நாட்களிலும் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 6,00 மணி வரை நடைபெறுவதாகவும், 16 பேர் கொண்ட ஆசிரியர் குழுவினால் பாடங்கள் போதிக்கப்படுவதாகவும் பிரஸ்தாப பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

## ஷெல்வீச்சுக்குபலியாகியவர் மனைவியும் மரணம்

(யாழ்ப்பாணம்)

வளலாய் கதிரிப்பாய் பகுதிகளிலிருந்து நேற்று முன்தினம் முன்னேறிவந்த இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலால் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமானார்.

கிருஷ்ணராசா தங்கச்சியம்மா (வயது40) பத்தமேனி என்பவரே காயமடைந்து மரணமானவராவார்.

மேற்படி சம்பவத்தில் இவரது கணவனும் மகளும் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது

இவர்களது வளவிற்குள் விழுந்து வெடித்த எறிகணையினால் குடும்ப அங்கத்தவர் ஐவர் படுகாயமடைந்தனர்.

இதில் இவரது கணவரான கணபதிப்பிள்ளை கிருஷ்ணராசா (வயது34) என்பவரும் இவரது மகளான கிருஷ்ணராசாகெங்காதேவி(வயது05) என்பவரும் உடன் பலியானார்கள்.

இதைத் தொடர்ந்து காயமடைந்தவர் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு நேற்றுமுன்தினம்இவர் மரணமானார்.

இதனால் குழந்தைகள் பெற்றோர் இருவரையும் இழந்த நிலையில்வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (88, நி)

## மன்னார் தீவுப்பகுதிகளில் புலிகளின் சுவரொட்டிகள்

(மன்னார்)

மன்னார் நகரத்தில், கடந்த மாதம் 11 ஆம் திகதியன்று, விடுதலைப்புலிகளின் கொமாண்டோ பிரிவினர் நடத்திய தாக்குதலின், 31ம் நினைவு நாளின் சுவரொட்டி

மேற்படி சுவரொட்டிகள் டலவற்றை படையினர் அகற்றினாலும், மன்னார் பொலிஸ் நிலையத்தின் எதிரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி அகற்றப்படாமல் தாக்குதல் நடத்திய விதம் பற்றி

## 45-ம் நாள் நினைவலைகள்



## சுயதொழில் கடன் மன்னாரில் வழங்கப்பட்டது

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் மாவட்டத்திலுள்ள 75 பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை ஊக்குவிக்கும் முகமாக விவசாயம் மற்றும் சிறுதானிய உற்பத்தியை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கே இக்கடன்கள் வழங்கப்பட்டன.

இதன்படி முழங்காவில் கிராமத்தில் 36 பயனாளிகளுக்கும், அசோக் எழுச்சிக் கிராமத்தில் 9 பயனாளிகளுக்கும் மாதர் சங்கரீதியாக 15 பயனாளிகளுக்கும் ஏனையோருக்குமாக ஒரு பயனாளிக்கு தலா 9000/- ரூபா வீதம் மொத்தம் 6,75,000/- ரூபாவிற்கு கடன்கள் வழங்கப்பட்டன.

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டுவருகின்றது. (22)

## நினைவு கூருகின்றோம்...

28. 09. 1994

காலை ஒன்பது மணியளவில் கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ் மாவட்ட அரசியற்துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## தமிழர் ஒருவர் முதல்தடவையாக போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்க தலைமை அலுவலக உப தலைவர் பதவிக்கு முதல் முறையாக தமிழர் ஒருவர் போட்டியிடுகின்றார்.

தற்போது செஞ்சிலுவை சங்க கரவெட்டி பிரிவு தலைவர் கே.ஜீ இராஜகாரியரே இப் பதவிக்கு போட்டியிடப் போவதாக தெரிய வந்துள்ளது. (நி)

## ஆட்டுக்குட்டிகளுக்கு தடுப்பூசி போடுதல்

கடந்த மாதம் அரியாலை கொக்குவில், தாவடி, கோப்பாய், பண்ணாகம் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற சமூக மேம்பாட்டுத்திட்ட ஆய்வுக் கூட்டத்தில் ஆடுகள் சில குறைமாதத்தில் குட்டிகளை ஈன்றதாகவும் சில குட்டிகள் பிறந்து ஒரிரு மாதத்தில் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஆடு வளர்ப்போர் தங்களுடைய ஆடுகள் கருத்தரித்து நாலாம் மாதத்தில் தாய் ஆட்டிற்கும், குட்டிகள் பிறந்தவுடன் குட்டிகளுக்கும் ஏற்புவலிக்கான தடுப்பூசிகளை போட்டு இவ்வாறு இறப்பு ஏற்படாமல் தடுக்குமாறு தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது.

நினைவு நாளின் சுவரொட்டிகள் இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் நகரமெங்கும் ஒட்டப்பட்டிருப்பதாக அங்கிருந்து எமது விசேட செய்தியாளர் அறிவிக்கின்றார்.

குதல் நடத்திய விதம் பற்றி விளக்கமளிப்பதற்காக ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் எப்போதும் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கின்றார். (நி)


## தேவை

பழைய கடதாசிகளில் அழகான கவர்ச்சிப் பொருட்கள், சிலைகள் பூச்சாடிகள், பறவைகள் மற்றும் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்
05-10 94 க்கு முன்பாக உங்களின்
விண்ணப்பங்களை

யாழ் பழைய புத்தகக்கடை,
அர்ச்சுனா சாலை (விவேகானந்தா அச்சகம் முன்)
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(9531)


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் குறிப்பாக பெரியகடைப் பகுதியில் வர்த்தகர்கள் தங்களின் வியாபார விளம்பரப் பலகைகளை கடைகளிற்கு முன்பாகவும், மின்சாரக் கம்பத்திலும் பொருத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயல்களால் வீதிப் போக்குவரத்திற்குப் பல இடையூறுகள் ஏற்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன. ஆதலால் வியாபார விளம்பரப் பலகைகளை கடைகளிற்கு முன்பாகவும். மின்கம்பங்களிலும் பொருத்த வேண்டாமென இத்தால் சம்பந்தப்பட்டவர்களை கோட்டுக் கொள்ளுகின்றேன். அத்துடன் நிரந்தர விளம்பரப் பலகைகளை பொருத்தியிருப்பவர்களும் பொருத்தவிருப்பவர்களும் அதற்கான அங்கீகாரத்தை மாநகர சபையிடம் பெற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளுகின்றேன். மீறுவோர் மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

21-09-94
(சி-10417)



## கப்டன் இசைமாறன்

### (கவாஸ்கர்)

(கனகராசா பிறேம்சந்திரன்)

முல்லை மாவட்ட மருத்துவப் பொறுப்பாளர்

| மண்ணில் மலராய் | விண்ணில் விதையாய் |
| --- | --- |
| 1-9-1969 | 14-8-1994 |

மருத்துவப் போராளியாய் கவாஸ்கர்
கருத்துடன் களம் பல கண்ட தோழன்
கண்ணெனக் கடமையில் வழுவாத வீரன்
எண்ணற்ற தோழர் உயிர்காத்த உத்தமன்
குணத்தினால் குன்றாக உயர்ந்து நின்ற வேங்கை
மணலாற்று மக்களின் மனங்களில் நிலைத்தவன்

வேதனை தரும் பற்களைக் களைந்து -தோழர்களாம்
வேங்கைகள் படும் இன்னலைத் துடைத்திடும்
இசைமாறன் என்ற இனிய புயல்படுத்தது
வடமராட்சி ஈந்த வரிப்புலி சாய்ந்தது
கடமையிலே தன்னுயிரைக் களத்தினில் ஈய்ந்தது
மாவீரனாகி மண்ணிலே வித்தாகி வீழ்ந்தது

தோழா! தானைத் தலைவனின் வழியினில் நடந்து
விழுப்புண் ஏற்றிடும் சேனைக்கு நாம் மருந்தாவோம்
தாயகக் கனவு சுமந்து தளராத உறுதி கொண்டு
ஓயாமல் நாமுழைத்து, நின்பணிதொடர்வோம்
மலரும் தமிழீழம் மகத்தான மேன்மைபெற
நிழலாக நாமிருந்து நிச்சயமாய்ச் செயற்படுவோம்.

முல்லை மாவட்ட மருத்துவப்
போராளிகள், போராளிகள்.
(9533)

## 28. 09. 1994

1988-ம் ஆண்டு கிளிநொச்சி-வட்டக்கச்சிப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கொலைசெய்யப்பட்டு, எமைப் பிரிந்த,

**சிட்டு** (மயில்வாகனம் கிருஷ்ணதாஸ்-திருவையாறு -கிளிநொச்சி)

1990-ம் ஆண்டு தீவகம், மண்கும்பான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**ரமேஸ்** (இரத்தினம் சத்தியராஜ்-வானம்பாடி, காரைநகர்-யாழ்)

1992-ம் ஆண்டு மணலாறு-கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் மீது தாக்குதல் நடத்தியபோது வீரச்சாவெய்திய,

**லெப். தேவநேயன் - குருசாமி** (மயில்வாகனம் சந்திரகுமார்-களுதாவளை-மட்டு)

**2-ம் லெப். வெற்றிவேல் - நீயா** (சித்திரவேல் ராமச்சந்திரன்-வாழைச்சேனை-மட்டு)

**கப்டன் திருமையான் - டேவிட்** (பாலகிருஷ்ணன் டேவிற்ஜேந்திரன்-திருமலை)

**2 ம் லெப். இளம்பிறை - ஞானம்** (பாக்கியராசா ரவி-மூதூர்-திருமலை)

**லெப். கோமகன் - கலீல்** (பிலிப்பையா பிறேமானந்தன்-சந்தாதோட்டம்-பருத்தித்துறை)

1993-ம் ஆண்டு யாழ்-இயக்கச்சிப் பகுதியில் முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். குருபரன்** (குகநேசசர்மா சிறீஸ்கந்தராஜா- -மாவடி வட்டுக்கோட்டை-காரைநகர்)

**2-ம் லெப். காந்தரூபன்** (சேனாதிராசா ஜெயகாந்தராசா-சூராவத்தை, சுண்ணாகம்-மயிலிட்டி)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(இ- 10416)

# விஞ்ஞானம் O/L

# மாணவர் அரங்கு

## மாணவர் கவனத்திற்கு

வெப்பம் என்னும் அலகு 6-ம் 7-ம் 8-ம் 9-ம் 10-ம் ஆண்டுகளில் தொடராக கற்று வந்த ஒன்றாகும். ஆனால் நாம் முந்திய ஆண்டுகளில் கற்றவற்றை மறந்தோ அல்லது மீட்கசந்தர்ப்பம்கிடையாதோபோயிருக்கலாம் எனவேவெப்பம் பற்றியமுழுஅறிவையும் பெறக்கூடியவகையில் எல்லா ஆண்டுப் பகுதிகளும் இங்கு தொகுத்து தரப்படுகிறது.

மறைவெப்பம் அடுத்த இதழில் தொடரும் மேலும்

கடந்தவார இயைபாக்கமும் சமநிலையும் தொடர்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் வெளியிடமுடியவில்லை. அடுத்த மாணவர் அரங்கில் தொடர்ந்து வெளியாகும்.

-ஆசிரியர்

## வெப்பம்

**01) வெப்பம் ஒரு சக்தியாகும்**

**02) வெப்பத்தை வழங்கும் சாதனங்கள் வெப்ப முதல்களாகும்**

உ+ம் சூரியன், எரிபொருட்கள் எரியும் இடம் (அடுப்பு / சூளை) உராய்வு நடைபெறும் இடம் சில மின்சாதனங்கள் (மின்னழுத்தி / மின்னடுப்பு)

**03) வெப்பம் :-**

அ) ஒரு சடப்பொருள் உள்ளடக்கிய வெப்பசக்தியின் அளவே வெப்பமாகும்.

ஆ) வெப்பத்தின் அலகுகள்

1) கலோரி 2) யூல் (J) (சர்வதேசஅலகு)

குறிப்பு = 1 கலோரி = 4.2 யூல்
1000 கலோரி = 1 கி கலோரி.
1000 யூல் = 1 கி. யூல்.

**04) வெப்பநிலை:-**

அ) ஒரு பொருளில் உள்ள வெப்பத்தின் படித்திறனே வெப்ப நிலையாகும்.

ஆ) வெப்பம் செல்லும் திசையை தீர்மானிப்பது வெப்பநிலையாகும் வெப்பநிலை கூடியஇடத்திலிருந்து வெப்பநிலை குறைந்த இடத்திற்கே வெப்பம் செல்லும்.

இ) வெப்பநிலையின் அலகுகள்

1) °C (சதமபாகை)
°F (பரனைட்)

**05) வெப்பக்கடத்தி:-**

அ) வெப்பத்தை தமக்கூடாக செல்ல விடுபவை வெப்பக் கடத்திகள் ஆகும்.

ஆ) பொதுவாக உலோகங்கள் வெப்பக்கடத்திகள் ஆகும். (இரும்பு / செம்பு / அலுமினியம்)

இ) வெப்பக் கடத்திகள் சமையல் பாத்திரம், அழுத்திகள் செய்யப் பயன்படுகின்றன.

ஈ) வெப்பக் கடத்திகளில் விரைவாக வெப்பத்தை செல்ல விடுபவை எளிதிற் கடத்திகள் எனப்படும்.

ஆறுதலாக செல்ல விடுபவை அரிதிற் கடத்திகள் எனப்படும்.

உ+ம் நீர், கண்ணாடி என்பன அரிதிற் கடத்திகள் ஆகும்

குறிப்பு;- மேற்குறித்த அரிதிற் கடத்தி என்னும் கோட்பாடு பின்வருமாறு மாணவர்கள் பிரயோக்கிக்க நேரிடும்.

i) அதிகாலையில் கிணற்று நீர் ஏன் சூடாக உள்ளது?

வெப்பத்தைக் கடத்த விரைவில் சூடாகிறது கிளாஸ் கண்ணாடியால் ஆனது கண்ணாடி அரிதிற் கடத்தி எனவே அது விரைவாக வெப்பத்தைக் கடத்தாது எனவே உடனே சுடுவதில்லை.

**06) வெப்பக்காவலி:-**

அ) வெப்பத்தை தமக்கூடாக செல்ல விடாதவை வெப்பக்காவலி ஆகும் உ+ம் மரம் இறப்பர், மாபிள்

ஆ) வெப்பக் காவலிகள் சமையல் பாத்திரம்; அழுத்தி என்பவற்றிற்கு கைப்பிடி இட பயன்படும்

இ) பனிக்கட்டி (Ice) மரத்தூளினுள் இடப்பட்டுள்ளபோது உருகுவதில்லை ஏன்?

பனிக்கட்டி வளியில் இருந்து வெப்பத்தைப் பெற்றே உருகும். மரம் வெப்பக்காவலி எனவே மரத்தூளால் மூடினால் வளியின் வெப்பம் பனிக்கட்டியை அடையாது எனவே மரத்தூளால் மூடினால் உருகாது.

**(07) வெப்பம் செல்லும் முறைகள்:**

(அ) வெப்பமானது வெப்பநிலை கூடிய இடத்தில் இருந்து வெப்பநிலை குறைந்த இடத்திற்கு செல்லும் என்பதை அறிந்து கொண்டோம்

(ஆ) வெப்பம் மூன்று பிரதான முறைகளால் ஓரிடத்தில் இருந்து வேறோர் இடத்திற்குச் செல்லும் அவையாவன.

(1) கடத்தல்
(2) மேற்காவுகை (உடன்காவுகை)
(3) கதிர் வீசல் (கதிர்ப்பு)

**(இ) கடத்தல்:-**

(1) ஊடகத்தின் மூலக்கூறு அசையாதிருக்க அதனூடாக வெப்பம் செல்லும் முறை கடத்தலாகும்.

(2) திண்மஊடகங்களினூடாக பிரதானமாக கடத்தல் முறையாலேயே வெப்பம்செல்லும்

**(ஈ) மேற்காவுகை:-**

(1) ஊடகத்தின் மூலக்கூறுகள் இடம் பெயர்ந்து வெப்பத்தைக் கொண்டு செல்லல் மேற் காவுகை ஆகும்.

(2) திரவ ஊடகங்களிலும், வாயு ஊடகங்களிலும் பொதுவாக மேற்காவுகை முறையாலேயே வெப்பம் கொண்டு செல்லப்படும்

**(உ) கதிர் வீசல்:-**

(1) வெப்ப முதலில் இருந்து வரும் வெப்பக்கதிர் இடையில் உள்ள ஊடகத்தை சூடாக்காது அடுத்துள்ள ஊடகத்தை சூடாக்கும் முறை கதிர் வீசலாகும்

(2) சூரியனில் இருந்து வரும் வெப்பக்கதிர் வளியை சூடாக்காது புவியை சூடாக்கல்-

(3) வெற்றிடங்களினூடாக கதிர் வீசல்முறையாலேயே வெப்பம் செல்லும்.

**வெப்பக்குடுவை:-**

i ஒரு பொருளின் வெப்பநிலையை மாறாது பேணும் சாதனமாகும்

ii இதில் கடத்தல், கதிர் வீசல், மேற்காவுகை ஆகிய முறைகளால் வெப்பம் உள்ளேயோ அல்லது வெளியேயோ செல்லாது தடுக்கப் பட்டிருப்பதனால் வெப்ப நிலை மாறாது பேணப்படுகிறது.

iii இதனுள் சூடான பொருளை வைத்தால் ஆறாமல் இருப்பது போல குளிரான பொருளும் சூடாகாது இருக்கும்

iv இங்கு பின்வரும் முறைகளால் வெப்பம் இழத்உறாது இருப்பதனால் கடத்தல் முறையால் வெப்பம் இழப்பது தடுக்கப்படும்

**(08) வெப்பத்தால் சடப்பொருட்களில் ஏற்படும் மாற்றங்கள்**

(அ) சடப்பொருளைவெப்பப்படுத்தும்பொழுது அதில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படும்

(1) அதன் வெப்பநிலை அதிகரிக்கும்
(2) விரிவடையும்
(3) நிலைமாற்றத்திற்கு உள்ளாகும்.

**(ஆ) வெப்பத்தால் சடப்பொருட்களில் ஏற்படும் விரிவு.**

(1) சடப்பொருளின் எல்லா நிலைகளிலும் (திண்ம/திரவ/வாயு)விரிவு ஏற்படும்.

(2) திண்மங்களிலும் திரவங்களில் ஏற்படும் விரிவு கூடவாகவும் திரவங்களிலும் வாயுக்களின் விரிவு கூடவாகவும் இருக்கும்.

(3) வளையம் ஒன்றினுள் மட்டுமட்டாக நுழையும் இரும்புக் குண்டை சூடாக்கியபின் செலுதினால் அது வளையத்தினூடாக நுழையாது இதிலிருந்து திண்மம் வெப்பத்தால் விரியும் என அறியலாம்.

(4) திண்மங்களின் விரிவு காரணமாக செயற்பாடுகள்.

### சு. அருள்நேசன்

(1) வண்டில் சில்லிற்கு வளைய மிடல்
(2) இறுகிய போத்தல் மூடியை கழட்டல்
(3) கோடை காலத்தில் தந்திக்கம்பிகள் தொய்தல்
(4) தண்டவாளங்களுக்கிடையில் இடை வெளி விட்டுப் பொருத்துதல்
(5) திரவங்களின் விரிவை ஆதாரமாக கொண்டே திரவ வெப்பமானிகள் இயங்குகின்றன.

**(இ) வெப்பமானிகள்**

(1) நாம் சதமவெப்பமானி, பரனைட் வெப்பமானி என இரு அலகுத் திட்டங்களில் வெப்பமானிகளை பயன்படுத்துகிறோம் (வேறு அளவுத் திட்ட வெப்பமானிகளும் உண்டு)

(2) வெப்பமானிகளில் கீழ் நிலைப்புள்ளி மேல் நிலைப் புள்ளி என இரு வகைப் புள்ளிகள் காணப்படும்

(3) கீழ் நிலைப்புள்ளி பனிக்கட்டியின் உருகுநிலையும் மேல் நிலைப்புள்ளி தூய நீரின் கொதிநிலையும் ஆகும்

(4) கீழ் நிலைப் புள்ளி 0° ஆகவும் மேல் நிலைப் புள்ளி 100° ஆகவும் கொண்ட 100 பிரிவுகள் காணப்படும் வெப்பமானி சதம வெப்பமானியாகும்

(5) கீழ் நிலைப்புள்ளி 32° ஆகவும் மேல் நிலைப் புள்ளி 212° ஆகவும் கொண்ட 180 பிரிவுகள் காணப்படும் வெப்பமானி பரனைட் வெப்பமானியாகும்

(6) $100°C$ பிரிவு = $180°F$ பிரிவு

$$\text{எனவே } 1°C = \frac{180}{100} = \frac{9}{5}\ F$$

$$1°F = \frac{100}{180} = \frac{5}{9}\ C$$

இனி °F ஐ °C ஆக்க

$$C = F-32 \times \frac{5}{9}$$

உ+ம் 95°F

$$C = (95-32) \times \frac{5}{9}$$

$$= 63 \times \frac{5}{9}$$

$$= 35°C$$

**நிலைமாற்றம்;**

(அ) நிலைமாற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்
உருகுதல், ஒடுங்குதல், ஆவியாதல், உறைதல், பதங்கமாதல்

(ஆ)

I திண்ம நிலையில் இருந்து திரவமாதல் - உருகுதல் எனப்படும்
II திரவ ,, ,, வாயுவாகுதல் - ஆவியாதல் எனப்படும்
III வாயு ,, ,, திரவமாதல் - ஒடுங்குதல் எனப்படும்
IV திரவ ,, ,, திண்மமாகுதல் - உறைதல் எனப்படும்
V திண்ம நிலையில் இருந்து வாயு நிலைக்கு அல்லது வாயுநிலையில் இருந்து திண்ம நிலைக்கு மாறுதல் - பதங்கமாதல் எனப்படும்

(இ) உருகுதலும் ஆவியாதலும் வெப்பத்தைப் பெற்றும் ஒடுங்குதலும் உறைதலும் வெப்பத்தை இழந்தும் நடைபெறும் நிலைமாற்றங்களாகும்

(ஈ) பதங்கமாக கூடிய பொருட்கள் :- கற்பூரம், பூச்சியுருண்டை (நெப்தலீன்) அமோனியம் குளோரைட்டு, அயடீன்

**தன் வெப்பம்**

(அ) ஒரு அலகு திணிவுள்ள பொருளை ஒரு பாகைக் கூடாக வெப்பமாக்க தேவையான வெப்பம் தன் வெப்பமாகும்.

உ+ம் 40 Kg திணிவை 30°Cயில் இருந்து 40°Cக்கு சூடாக்க தேவையான வெப்பம் 1500J எனில் தன் வெப்பம்

40Kg ஐ 10°C (30° இல் இருந்து 40°)ற்கு சூடாக்க தேவையான வெப்பம் = 1500

∴ 40Kg 1° C ,, $= \frac{1500}{10}$

∴ 1Kg 1° C ,, $= \frac{1500}{40 \times 10}$ = 3.75J

∴ தன் வெப்பம் = 3.75 J/Kg/°C

$$\text{தன் வெப்பம்} = \frac{\text{வழங்கிய வெப்பம்}}{\text{திணிவு} \times \text{வெப்பநிலைமாற்றம்}}$$

$$S = \frac{H}{M\theta}$$

S- தன் வெப்பம் H- வெப்பம் M- திணிவு
θ (தீற்றா) - வெப்பநிலை மாற்றம்

தன் வெப்பத்தின் அலகு

[1] $J\,g^{-1}\,C^{-1}$

[2] $J\,Kg^{-1}\,C^{-1}$

பயிற்சி

(1) ஒரு பதார்த்தத்தின் தன் வெப்பம் 0 8$Jg^{-1}C^{-1}$ என்பதில் இருந்து யாது விளங்குகிறீர்.

(2) 80g திணிவுள்ள திண்மத்தை 30°cயில் இருந்து 60°C க்கு சூடாக்க 1600J வெப்பம் தேவைப்பட்டால் அதன் தன் வெப்பம் யாது?

(3) 0.4 $J\,g^{-1}\,C^{-1}$ தன் வெப்பம் உள்ள 120g திணிவுள்ள திண்மத்தை 30°Cயில் இருந்து 50°Cக்கு சூடாக்க தேவையான வெப்பத்தைக் காண்க

(4) 1 8 $J\,g^{-1}\,C^{-1}$ தன் வெப்பம் உள்ள திண்மம்

பிரயோக்கிக்க நேரிடும்.

i) அதிகாலையில் கிணற்று நீர் ஏன் சூடாக உள்ளது?

நீர் ஓர் அரிதிற் கடத்தி என்பதனால் அது சூழலிற்கு வெப்பத்தை விரைவில் இழக்காது ஆனால் காலையில் சூழல் வெப்பநிலை குறைவாக இருக்க நீர் சூடாக உள்ளது.

ii) ஒரே வெப்பநிலையில் உள்ள வெந்நீரை ஒரு எவர்சில்வர் தம்ளரினுள்ளும் கிளாசினுள்ளும் ஊற்றி அவற்றை கையால் பிடிக்கும்போது தம்ளரே அதிக சூடாக உள்ளது ஏன்?

தம்ளர் உலோகம் எளிதிற் கடத்தி விரைவாக

மல் இருப்பது போல குளிரான பொருளும் சூடாகாது இருக்கும்

iv இங்கு பின்வரும் முறைகளால் வெப்பம் இழத்தல், அல்லது ஏற்றல் தடுக்கப்பட்டுள்ளது.

i போத்தலின் சுவர் பளபளப்பாக காணப்படுவதனால் கதிர் வீசல் முறையால் வெப்பம் செல்வது தடுக்கப்படும்.

ii இது இரட்டைச் சுவருடைய போத்தல் இரு சுவர்களுக்கிடையிலும் வெற்றிடம் காணப்படுவதனால் மேற்காவுகை முறையால் வெப்பம் செல்வது தடுக்கப்படும்.

iii உலோக உறையுடன் தக்கையால் தொடுகை

$$1°F = \frac{100}{180} = \frac{5}{9}\ C$$

இனி °Cஐ Fஆக மாற்ற செய்யவேண்டியது

$$F = C \times \frac{9}{5} + 32$$

உ+ம் 30°C

$$F = \frac{30 \times 9}{5} + 32$$
$$= 54 + 32$$
$$= 86°F$$

-1-1

(4) 1 8 J g C தன் வெப்பம் உள்ள திண்மம் 40°Cயில் இருந்து 70°Cக்கு சூடாக்க 3240 J வெப்பம் தேவைப்பட்டால் அதன் திணிவு யாது

-1 -1

(5) 1. 8 J g C தன் வெப்பமுள்ளதும் 90g நிறையுள்ளதுமான திண்மத்திற்கு 1600J வெப்பம் வழங்கினால் அதில் ஏற்படும் வெப்பநிலை மாற்றத்தைக் காண்க

(மறை வெப்பம் அடுத்த வாரம் தொடரும்)

---

# கணிதம் O/L

## கூட்டல் விருத்தி தொடர்ச்சி ......

### பயிற்சி (6) இற்கான விடைகள்

i -4982
ii 9016.9
iii ரூ 4321.00
iv அ) ரூ 266.50
ஆ) ரூ 5609 00
v 221.60

## சில உதாரணங்கள்

### உதாரணம் (1)

கூட்டல் தொடர் ஒன்றின் முதல்n உறுப்புக்களின் கூட்டுத் தொகை $5n-n^2$ ஆகும்

(அ) தொடரைக் காண்க

(ஆ) முதல் 7 உறுப்புக்களின் கூட்டுத் தொகையினைக் காண்க

(இ) இத்தொடரின் முதல் உறுப்பிலிருந்து கூட்டுத் தொகை பூச்சியமாவதற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டிய உறுப்புக்களின் எண்ணிக்கை யாது?

**விடை**

அ) $S_n = 5n - n^2$

$n=1 \rightarrow S_1 = 5\times1 - 1^2$

$S_1 = 4$

$S_1$ என்பது ஒரு உறுப்பின் கூட்டுத் தொகையாகும் அதாவது 1ம் உறுப்பு ஆகும்

∴ 1ம் உறுப்பு = 4.

$S_2 = 5\times2 - 2^2$

$S_2 = 6$

$S_2$ என்பது இரு உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாகும் ஆனால் முதலாம் உறுப்பு 4 ஆகும்.

∴ இரண்டாம் உறுப்பு = 6 – 4
= 2

$S_3 = 5\times3 - 3^2$
$= 6$

$S_3$ என்பது மூன்று உறுப்புக்களின் கூட்டுத் தொகையாகும். ஆனால் இரு உறுப்புக்களின் கூட்டுத் தொகை 6 ஆகும்

ஆகவே மூன்றாம் உறுப்பு = 6 – 6
= 0

∴ தொடர் 4, 2, 0,.........

ஆ) இவ்வினாவைப் பொறுத்தவரை கூட்டுத் தொகை காண்பதற்கான நியமசமன்பாடு $S_n=5n-n^2$ ஆகும் அதில் nஇற்கு பெறுமானங்களை இட்டு கூட்டுத் தொகையினைக் காணமுடியும்.

n = 7ஆக

$S_7 = 5\times7 - 7^3$
$= 35 - 49$
$= 14$

∴ முதல் 7 உறுப்புக்களின் கூட்டுத் தொகை 14 ஆகும்.

இ) இங்கு கூட்டுத்தொகை $S_n = 0$ என தரப்பட்டுள்ளது.

$S_n = 5n - n^2$
$0 = 5n - n^2$
$0 = n(5 - n)$
$n = 0$ அல்லது $5 - n = 0$
$n = 5$

∴ $n = 0$ அல்லது $n = 5$

ஆனால் $n = 0$ எனும் விடை இவ்வினாவுக்குப் பொருத்தமானதல்ல

∴ $n = 5$

∴ முதல் 5 உறுப்புக்களின் கூட்டுத் தொகை பூச்சியமாகும்.

### உதாரணம் 2

அ) ஒன்று தொடக்கம் நூறு வரையுள்ள எண்ணும் எண்களின் எண்ணிக்கை யாது?

ஆ) அவற்றின் கூட்டுத்தொகை யாது?

இ) ஒன்று தொடக்கம் நூறு வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத் தொகை யாது

ஈ) அவற்றின் கூட்டுத் தொகையாது?

உ) ஒன்று தொடக்கம் நூறு வரையுள்ள 7இன் மடங்கு அல்லாத எண்களின் கூட்டுத் தொகை யாது?

**விடை**

(அ) ஒன்று தொடக்கம் நூறு வரையுள்ள எண்ணும் எண்களின் எண்ணிக்கை நூறு என இலகுவாக கூறிவிடமுடியும் ஆனால் இது செய்கை முறைஅற்ற ஓர் விடையாகும்.

ஒன்று தொடக்கம் 100 வரையுள்ள எண்ணும் எண்களின் தொடர் பின்வருமாறு அமையும்.

1,2,3 ......... 100 இது கூட்டல் தொடர் ஆகும்

இங்கு $a = 1,\ d = 1,\ T_n = 100,\ n = ?$

$T_n = a + (n-1)d$
$100 = 1 + (n-1)1$
$99 = n - 1$
$100 = n$

∴ 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்ணும் எண்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

(ஆ) $a = 1,\ d = 100,\ n = 100$

$S_n = \frac{n}{2}(a + l)$ (∴ இறுதி உறுப்பு தெரியும் என்பதனால் இச்சமன்பாட்டினை உபயோகிக்கலாம்)

$S_{100} = \frac{100}{2}(1 + 100)$
$= 50 \times 101$
$= 5050$

∴ 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்ணும் எண்களின் கூட்டுத் தொகை.5050 ஆகும்.

(இ) 1 தொடக்கம் 100 வரையுள்ள இரட்டை எண்களின் தொடர் பின்வருமாறு அமையும்

2, 4, 6 - - - - - -100 இது கூட்டல் தொடர் ஆகும்

$a\ 2,\ d=2,\ T_n=,100,\ n=?$

$T_n = a + (n-1)d$
$100 = 2 + (n-1)\ 2$
$98 = (n-1)\ 2$
$\frac{98}{2} = n-1$
$49 = n-1$
$50 = n$

∴ 1 தொடக்கம் 100 வரையுள்ள இரட்டை எண்களின் எண்ணிக்கை 50 ஆகும்

(ஈ) $a=2,\ d=100,\ n=50$

$S_n = \frac{n}{2}(a+l)$

$S_{50} = \frac{50}{2}(2+100)$
$= 25 \times 102$
$= 2550$

---


**த. நித்தியானந்தம்**

சரசாலை


∴ இரட்டை எண்களின் கூட்டுத்தொகை 2550 ஆகும்

உ) இவ்வினாப் பகுதியைப் பொறுத்தவரை 7இன் மடங்குகள் அல்லாத எண்களைக் கூட்டல் தொடர் வடிவில் எழுத முடியாது ஆனால் 7 இன் மடங்குகளை எழுதமுடியும்.

ஆகவே 7இன் மடங்குகளின் கூட்டுத்தொகையினைப் பெற்று பின்னர் மொத்த எண்களின் கூட்டுத் தொகையிலிருந்து கழித்தல் வேண்டும்.

7இன் மடங்குகளின் தொடர்

7, 14, 21, ......... 98

$a = 7,\ d = 7,\ T_n = 98,\ n = ?$

$T_n = a + (n - 1)d$
$98 = 7 + (n-1)\ 7$
$91 = (n-1)\ 7$
$\frac{91}{7} = n-1$
$13 = n-1$
$14 = n$

∴ 7 இன் மடங்குகளின் எண்ணிக்கை = 14

$S_n = \frac{n}{2}(a+l)$

[4ஆம் பக்கம் பார்க்க]

# தூயகணிதம் A/L
## PURE MATHEMATICS

### நிகழ்தகவுக் கொள்கை
### (Probability theory)

### அலகு 1: மாதிரிவெளி, நிகழ்ச்சிகள், விதிகள்

நாளாந்த வாழ்க்கையில் இயற்கையாக நிகழக் கூடிய பல எதிர்கால நிகழ்ச்சிகளின் விளைவுகள் அல்லது அவை பற்றி மனதில் தோன்றும் எண்ணங்கள் கருத்துக்கள் போன்றவற்றைப் போதுமான அளவிற்கு திட்டவட்டமாக எடுத்தியம்புதல் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட தொன்றாகும். எனினும் பல நிலைமைகளில் எதிர்காலத்தில் இடம்பெறப்போகும் நிகழ்வுகளைப் பற்றிய விளைவுகள் அறியப்பட வேண்டிய தொன்றாக உள்ளது. இவ்விளைவுகளை மிகக் கூடியளவுக்குத் திருத்தமாக அறிவதற்கு மட்டுமல்லாது நிகழ்ச்சி ஒன்றின் நிகழ்விற்கான சாத்தியக்கூறு பற்றிய நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கும் நிகழ்தகவு பயன்படுகின்றது, எவ்வகையான ஒரு நிகழ்ச்சி, நேர்தகவுக் காரணத்தையொட்டி நிகழக்கூடியதாகவும் மீண்டும், மீண்டும் ஏற்படக் கூடியதாகவும் அமைகின்றதோ, அவ்வாறான நிகழ்ச்சிகளுக்கே நிகழ்தகவு பயனளிக்கின்றது. நிகழ்ச்சிகளின் நிகழ்விற்கான சாத்தியக் கூறை ஓரளவிற்காவது திருத்தமாக அளவிட்டு எண் பெறுமானத்தில் தருவதே நிகழ்தகவாகும். இவ்விதம் கணித்துக்கூறுவது நடைமுறைச் செயல்களுக்கு முரண்படாதிருத்தல் விரும்பத்தக்கதாகும்.

நிகழ்ச்சியொன்றின் நிகழ்தகவைக் காண்பதற்கு அந்நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட எழுமாறான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். பரிசோதனை ஒன்றில், அதன் பெறுபேறுகளை எதிர்வு கூற முடியாமலிருக்கும் போதும் அதே நிபந்தனைகளின் கீழ் அப்பரிசோதனையை மீண்டும் மீண்டும் நிகழ்த்தக் கூடியவாறுஇருக்கும் போதும், அது எழுமாறான பரிசோதனை (Random Experiment) எனப்படும்.

இவ் எழுமாறான பரிசோதனையில் இருந்து மாதிரிவெளி ஒன்று அமைக்கப்படும்

**மாதிரி வெளி (Sample Space)**

எழுமாறான பரிசோதனை ஒன்றில் பெறப்படும் சகல இயல்தகுவான பெறுபேறுகளின் சேர்க்கையே மாதிரிவெளி என வரையறுக்கப்படும் இது S இனால் குறிக்கப்படும்.

**மாதிரிப்புள்ளிகள் (Sample Points)**

மாதிரிவெளி ஒன்றில் இடம் பெறும் உறுப்புகள் அதன் மாதிரிப்புள்ளிகள் எனப்படும்.

தொடையொன்றில் காணப்படுவது அதன் மூலகங்கள் என்பது போல் மாதிரிவெளியில் மாதிரிப்புள்ளிகள் காணப்படும். மாதிரிவெளியொன்றில்,

(1) ஒரு மாதிரிப்புள்ளி ஒரேயொரு தடவை மட்டுமே எழுதப்படும்


(2) மாதிரிப்புள்ளிகள் எந்த ஒழுங்கிலும் எழுதப் படலாம்.

(உ+ம்) (1) ''சதுரமுகித் தாயக்கட்டையொன்றை உருட்டுதல்'' என்ற எழுமாறான பரிசோதனை ஒன்றில் அமைக்கப்படும் மாதிரிவெளி S பின் வருமாறு அமையும்.

$$S = [1, 2, 3, 4, 5, 6]$$


(உ+ம்) (2) 3 சிவப்பாகவும் 2 கறுப்பாகவும் உடைய 5 வெவ்வேறான குண்டுகளைக் கொண்ட பெட்டியொன்றிலிருந்து ஒவ்வொன்றாக இரண்டு குண்டுகள் எழுமாறாக எடுக்கப் பட்டு அவற்றின் நிறங்கள் குறிக்கப்படும் பரிசோதனையில் அமைக்கப்படும் மாதிரிவெளி

(a) பிரதிவைப்புடன் (With replacement)



$$S = \left| \begin{matrix} (R_1R_1), & (R_1R_2), & (R_1R_3), & (R_1W_1), & (R_1W_2), \\ (R_2R_1), & (R_2R_2), & (R_2R_3), & (R_2W_1), & (R_2W_2), \\ (R_3,R_1) & (R_3,R_2) & (R_3R_3) & (R_3,W_1) & (R_3,W_2) \\ (W_1,R_1) & (W_1,R_2) & (W_1,R_3) & (W_1,W_1) & (W_1,W_2) \\ (W_2R_1), & (W_2R_2) & (W_2R_3) & (W_2W_1) & (W_2W_2) \end{matrix} \right|$$

(b) பிரதிவைப்பில்லாமல் (Without Replacement)



$$S = \left| \begin{matrix} (R_1R_2) & (R_1R_3) & (R_1W_1) & (R_1w_2) \\ (R_2R_1) & (R_2R_3) & (R_2W_1) & (R_2W_2) \\ (R_3R_1) & (R_3R_2) & (R_3W_1) & (R_3W_2) \\ (W_1R_1) & (W_{21}R) & (W_1R_3) & (W_1W_2) \\ (W_2R_1) & (W_2R_2) & (W_2R_3) & (W_2W_1) \end{matrix} \right|$$

மாதிரி வெளியில் பல வகைகள் உள.

1) முடிவுள்ள மாதிரிவெளி (Finite Sample Space)

ஒரு மாதிரிவெளி முடிவுள்ள மாதிரிப்புள்ளிகளைக் கொண்டிருக்கும் எனின் அது முடிவுள்ள மாதிரிவெளி ஆகும்.

(உ+ம்) 1) ''நாணயமொன்றை உருட்டுதல்'' தரும் மாதிரிவெளி S பின் வருமாறு அமையும்.

$$S = [\ H, T\ ]$$

(உ+ம் (2) ''நாடகவிழா ஒன்றின் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் A, B, C. எனும் 3 நாடகக் குழுக்களின் தெரிவுகள்'' தரும் மாதிரிவெளி S பின்வருமாறு அமையும்.

S = [ (A.B,C) இன் வரிசை மாற்றங்கள்]

$$S = [\ ABC, ACB, BAC, BCA, CAB, CBA]$$

2) முடிவற்ற மாதிரிவெளி (Infinite Sample Space)

ஒரு மாதிரிவெளி முடிவற்ற மாதிரிப் புள்ளிகளைக் கொண்டிருக்கும் எனின் அது முடிவற்ற மாதிரி வெளி ஆகும்.

(உ+ம்) 1] ''முதன்மை எண்களைத் தெரிதல்'' தரும் மாதிரிவெளி S பின் வருமாறு அமையும்.

$$S = [2, 3, 5, 7, 11, 13, 17, 19 \ldots\ldots]$$

3) பின்னக மாதிரிவெளி (Discrete Sample Space)


மாதிரிவெளியிலுள்ள மாதிரிப்புள்ளிகள் எண்ணத்தக்கவை எனின் அது பின்னக மாதிரிவெளி ஆகும்.


(உ+ம்) (1) மேலுள்ள உதாரணத்தில் S என்பது முடிவற்ற பின்னக மாதிரிவெளி ஆகும்


**ஶ்ரீ. கிருஷ்ணகுமார்**
B. SC. Dip in Edu
கணித ஆசிரியர் (உடுவில் மகளிர் கல்லூரி)


(உ+ம்) (2) ஒரு பெட்டி சிவப்பு (R), பச்சை (G), மஞ்சள் (Y), நிறமுடைய ஒரே மாதிரியான அட்டைகளைக் கொண்டுள்ளது. இதிலிருந்து ஒரு அட்டை எழுமாறாக எடுக்கப்படுகின்றது.

(a) பிரதிவைப்புடன் (b) பிரதிவைப்பின்றி





$$S - [RR, RG, RY, GR, GG, GY, YR, YG, YY]$$

$$S - [RG, RY, GR, GY, YR, YG]$$

தொடர் மாதிரி வெளி (Continous Sample SPace)

மாதிரிவெளியிலுள்ள மாதிரிப்புள்ளிகள் எண்ண முடியாமலிருப்பின் அது தொடர்மாதிரிவெளி ஆகும்,

(உ+ம்) (1) மின்கல வானொலிப் பெட்டியின் ஆயுட்காலத்தை (மணித்தியாலத்தில்) அளக்கும் பரிசோதனையில் அமைக்கப்படும் மாதிரி வெளி நேர்மெய் எண்களைக் கொண்டிருக்கும்.

$$S = \{ X;\ 0 \leq X < \infty \}$$

[உ+ம்] [2] பஸ்தரிப்பு நிலையமொன்றில் ஒருவர் காலை 6 00 மணியிலிருந்து 10.00 மணி வரை பஸ்சிற்காக காத்து நிற்றல்.

$$S = \{ t:\ 6 \leq t \leq 10 \}$$

(தொடரும்)

---

# கணிதம்

$$S_{14} = \frac{14}{2}(7+98)$$
$$= 7 \times 105$$
$$= 735$$

∴ 7இன் மடங்குகள் அல்லாத எண்களின் கூட்டுத் தொகை $= 5050 - 735 = 4315$ ஆகும்

1.

(1) +16, +13, +10, ... ... ... -131 எனும் விருத்தியைக் கூர்ந்தாராய்ந்து அது ஒரு கூட்டல் விருத்தியா பெருக்கல் விருத்தியா எனக் காரணம் தந்து கூறுக.

(2) மேலே (1) இலுள்ள விருத்தியின் n வது உறுப்பை n இற் கண்டு அதனை எளிய வடிவில் தருக.

(3) இந்த விருத்தியின் எந்த உறுப்பு - 131 ஆகும்?

(4) மேலுள்ள விருத்தியின் முதல் 22 உறுப்புக்களின் கூட்டுத் தொகையைக் காண்க,

(1992 டிசம்பர்)

2.

(அ) கூட்டல் தொடர் ஒன்றின் முதலாம் உறுப்பு a ஆகவும் பொதுவித்தியாசம் d ஆகவும் இருப்பின்,

ப்பு 50 ஆகும் இத்தொடரின் முதல் இருபத்தொரு உறுப்புக்களின் கூட்டுத்தொகை 420 எனில், அதன்,

(1) முதலுறுப்பு (2) பொதுவித்தியாசம் என்பனவற்றைக் காண்க.

(1990 டிசம்பர்)

4. கூட்டல் தொடர் ஒன்றின் முதலாம் உறுப்பும் கடைசி உறுப்பும் முறையே -3,36 ஆகும். இக் கூட்டல் தொடரின் உறுப்புக்களின் கூட்டுத் தொகை 168 எனின்

(1) உறுப்புக்களின் எண்ணிக்கையையும் பொதுவித்தியாசத்தையும் காண்க

(1989 டிசம்பர் NEW)

5. கூட்டல் விருத்தி ஒன்றின் ஐந்தாம் உறுப்பு 44, ஒன்பதாம் உறுப்பு 38 ஆகும்.

(1) முதலாம் உறுப்பு (2) பொதுவித்தியாசம்

(3) முதல்11 உறுப்புக்களினதும் கூட்டுத்தொகை என்பவற்றைக் காண்க·

(1989 டிசம்பர் OLD)

6. ஒரு கூட்டல் விருத்தியின் 19ம் உறுப்பு 33ஆகும் அதன் முதல் 20 உறுப்புக்களின் கூட்டுத்தொகை 320 ஆகும்.

(1) கூட்டல் விருத்தியின் முதலாம் உறுப்பையும் பொதுவித்தியாசத்தையும் காண்க

(2) கூட்டல் விருத்தியின் ஐம்பத்தாறாம் உறுப்பு என்ன?

2) இக் கூட்டல் விருத்தியின் பதினோராவது உறுப்பில் ஆரம்பித்து - 400 ஐக் கூட்டுத் தொகையாகப் பெறுவதற்கு எத்தனை உறுப்புக்கள் எடுக்கப்படல் வேண்டும்? (பொருத்தமான சூத்திரங்களைப் பயன்படுத்துக)

(1987 டிசம்பர்)

9. (1) 35 இற்கும் 160 இற்குமிடையில் 6 இன் மடங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

(2) அவற்றின் கூட்டுத் தொகையைக் காண்க.

(1986 டிசம்பர்)

10. கூட்டல் விருத்தி ஒன்றின் முதற் பதினைந்து உறுப்புக்களினதும் கூட்டுத் தொகை - 255 ஆகும். கடைசி உறுப்பு - 45 ஆகும். பின்வருவனவற்றைக் காண்க.

(1) முதல் உறுப்பு (2) பொதுவித்தியாசம்

(3) 10 வது உறுப்பு

(1985 டிசம்பர்)

11. ஒரு கூட்டல் விருத்தியின் முதல்உறுப்பும் பொதுவித்தியாசமும் முறையே 8உம் 2உம் ஆகும் இவ் விருத்தியின் முதன் 13உறுப்புக்களின் கூட்டுத்தொகை பொதுவிகிதம் $\frac{1}{3}$ ஐக் கொண்ட பெருக்கல் விருத்தியின் முதல் 3உறுப்புகளின் கூட்டுத் தொகைக்குச் சமனாகும்.

(1) இத்தொடரின் பொதுவித்தியாசத்தைக் காண்க.

(2) 3, இத்தொடரின் எத்தனையாம் உறுப்பு ஆகும்?

(3) இத்தொடரின் 4ம், 10ம், 12ம், உறுப்புக்களை முறையே முதல் மூன்று உறுப்புகளாகவுடைய தொடரின் வகையைக் கூறுக?

(4) 255 ஐ கூட்டுத்தொகையாகப் பெறுவதற்கு 1 ம் உறுப்பில் ஆரம்பித்து மூலத் தொடரின் எத்தனை உறுப்புக்களை எடுக்கவேண்டும்?

(1983 டிசம்பர்)

13. கூட்டல் தொடரொன்றின் 1-ம் உறுப்பு 9உம், 7ம் உறுப்பு 27உம் ஆகும்

(1) இத்தொடரின் பொதுவித்தியாசத்தைக் காண்க

(2) 69 இத்தொடரின் எத்தனையாம் உறுப்பு ஆகும்?

(3) இத் தொடரில் முதல் 33 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க

(4) இத்தொடரின் 2-ம், 4-ம், 7-ம் உறுப்புக்களை முறையே முதல்மூன்று உறுப்புக்களாகவுடைய தொடரின் வகையைக் கூறுக காரணங்கள் தருக

2.

(அ) கூட்டல் தொடர் ஒன்றின் முதலாம் உறுப்பு a ஆகவும் பொதுவித்தியாசம் d ஆகவும் இருப்பின்,
(1) n வது உறுப்பிற்கான சூத்திரத்தையும்,
(2) முதல் n உறுப்புக்களின் கூட்டுத்தொகைக்கான சூத்திரத்தையும் a, d என்பவற்றில் எழுதுக.

(ஆ) கூட்டல் தொடர் ஒன்றின் முதல் ஆறு உறுப்புக்களின் கூட்டுத்தொகை 141 ஆகும் ஆறாவது உறுப்பு 36 எனில், தொடரின்,
(1) முதலுறுப்பு. (2) பொது வித்தியாசம்
(3) முதல் பன்னிரண்டு உறுப்புக்களின் கூட்டுத் தொகை என்பவற்றைக் காண்க?

(1991 டிசம்பர்)

3.

கூட்டல் தொடர் ஒன்றின் இருபத் தொன்றாம் உறு

(1) கூட்டல் விருத்தியின் முதலாம் உறுப்பையும் பொதுவித்தியாசத்தையும் காண்க
(2) கூட்டல் விருத்தியின் ஐம்பத்தாறாம் உறுப்பு என்ன?

(1988 டிசம்பர் **OLD/NEW**)

7. கூட்டல் விருத்தி ஒன்றின் இரண்டாம் உறுப்பு 7.5 உம் முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத் தொகை 162.5 உம் ஆகும். இக் கூட்டல் தொடரின் முதல் உறுப்பையும் பொது வித்தியாசத்தையும் காண்க

(1988 யூலை)

8. கூட்டல் விருத்தி ஒன்றின் ஐந்தாவது உறுப்பு 38 உம் பதினோராவது உறுப்பு 20உம் ஆகும்.
1) இக் கூட்டல் விருத்தியின் முதலாவது உறுப்பையும், பொது வித்தியாசத்தையும் காண்க.

விருத்தியின் முதன் 13உறுப்புக்களின் கூட்டுத்தொகை பொதுவிகிதம் $\frac{1}{3}$ஐக் கொண்ட பெருக்கல் விருத்தியின் முதல் 3உறுப்புகளின் கூட்டுத் தொகைக்குச் சமனாகும்.

1) கூட்டல் விருத்தியின் முதல் 13 உறுப்புக்களின் கூட்டுத் தொகையைக் காண்க-
2) பெருக்கல் விருத்தியின் முதல் உறுப்பைக் காண்க.
3) பெருக்கல் விருத்தியின் 5 வது உறுப்பைக் காண்க

(1984 டிசம்பர் **Special**)

12.

கூட்டல் தொடரொன்றின் 5 ம் உறுப்பு 24 ஆகும். அதன் முதல் மூன்று உறுப்புக்களின் கூட்டுத்தொகை 99 ஆகும்

(4) இத்தொடரின் 2-ம், 4-ம், 7-ம் உறுப்புக்களை முறையே முதல்மூன்று உறுப்புக்களாகவுடைய தொடரின் வகையைக் கூறுக காரணங்கள் தந்து கூறுக

(1982 டிசப்பர்)

14. ஒரு தொடரின் n-ம் உறுப்பு 25- 4n ஆகும்.

[1] இத்தொடரின் முதல் மூன்று உறுப்புக்களையும் காண்க-
[2] இது கூட்டல் தொடரா அல்லது பெருக்கல் தொடரா எனக் காரணம் தந்து குறிப்பிடுக.
[3] இத்தொடரின் -83 எத்தனையாம் உறுப்பு? இத்தொடரின் முதல் 32 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

[1981 டிசம்பர்]


## 3 ஆம் ஆண்டு நினைவாக

பிறப்பு:
25. 04. 1966



விரச்சாவு:
14. 09. 1991

### வீரவேங்கை யூட்டி
(இராசரத்தினம் ஜெயதேவி)

மணலாறு தன்னில் களம் காண என்று
மகிழ்வோடு சென்று மாவீரரான
வரலாறு இன்று வருடங்கள் மூன்றாய்
வருகின்ற போதுமெம்துயர் தீரவில்லை.

14. 09. 1991 அன்று மணலாற்றில் நடைபெற்ற சமரில் வீரச்சாவெய்திய யூட்டி அவர்களுக்கும் ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

வேம்படி,
உடுத்துறை. (9292)

உனது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


## பிரதமரின் பாதுகாப்பு பிரிவு
## டி. ஐ. ஜியாக குணவர்த்தன

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகாவின் பாதுகாப்புபிரிவு பிரதி பொலிஸ்மா அதிபராக காமினி குணவர்த்தனா பதவி ஏற்றுள்ளார். இவர் 1990இல் அமெரிக்கஹாவாட்பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை படித்துக் கொண்டிருந்த போது வேலை நீக்க உத்தரவு கிடைத்தது.

வேலை நீக்க அறிவித்தலை எதிர்த்து குணவர்த்தனா அரச சேவை கமிஷனுக்கு அப்பீல் செய்தார். வேலை நீக்க அறிவித்தலை வாபஸ் பெறுமாறு அரச சேவை கமிஷன் கேட்டுக் கொண்டும் அரசியல் தலையீட்டினால் இவருக்கு மீண்டும் பதவி வழங்கப்படவில்லைகுணவர்த்தனா கடைசியாக மத்தியபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றினார்


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் கோட்டம்

### முக்கிய அறிவித்தல்

மாவட்ட பொதுச் சபையின் தீர்மானப்படி தியாகி திலீபன் நினைவு நாள் விழாவிற்கான நிதியை சகல பொதுச்சபை உறுப்பினர்களும் 16 - 09 -94 க்கு முன் செம்மணி வீதி. நல்லூரில் அமைந்துள்ள அலுவலகத்தில் செலுத்தும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

விபரங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்
யாழ் கோட்டம்

(சி/10332)


## சந்திரிகாவின் சமரச முயற்சிகள்
## ஐ.தே.க: குழப்பலாம்
### முன்னாள் விமானப்படைத் தளபதி

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் பட்டு வரும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான முயற்சியை தனது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை வைத்து கொண்டு ஐக்கிய தேசிய கட்சி குழப்புவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாக முன்னாள் விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ஹரி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் இவ் நடவடிக்கை புதிய அரசாங்கத்தின் பிரதமருக்கு ஓர் பின்னடைவு நிலையை ஏற்படுத்தி இருப்பதாக சுட்டிக் காட்டிய அவர் தற்போது முப்படைகளின் நடவடிக்கையை கட்டுப் படுத்தும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருப்பதாகவும் எனவே எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெறும் மோதல் உச்ச நிலை அடைந்தாலும் அது குறித்து ஆச்சரியப்படுவதற்கு இல்லை என தெரிவித்தார்.

சென்ற வாரம் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம் பெற்ற யுத்தம் இந் நிலையை தான் எடுத்துக் காட்டியதாகவும் இது குறித்து புதிய அரசாங்கம் ஓர் பின்னடைவை கொள்ளாது தொடர்ந்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்து செல்ல வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பழிவாங்கப்பட்டோர் விபரம்
## சேகரிக்க அமைச்சுகுழுக்கள்

(கொழும்பு)

1977 ம் ஆண்டிற்கு பின்னர் அரசியல் காரணங்களுக்காக பழிவாங்கப்பட்ட அரசாங்க ஊழியர்களின் விபரங்களைத் திரட்டுவதற்கான ஒவ்வொரு அமைச்சும் தனித்தனி குழுக்களை அமைத்துள்ளன. அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றில் கடமையாற்றி அரசியல் காரணங்களுக்காக பதவி இழந்தவர்கள், பதவி உயர்வு மறுக்கப் பட்டவர்கள், மற்றும் சலுகை இழந்தவர்களின் பிரச்சினைகள் பற்றி இக் குழுக்கள் ஆராயும் இக் குழுக்களுக்கு பிரதி அமைச்சர்கள் தலைமை வகிப்பார்கள். இவ்வாறு பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி ஆலோசனைகள் சிபார்சுகள் என்பவற்றை இக் குழுக்கள் சிபார்சு செய்யும் என்றும், மீண்டும் வேலை வழங்குவது, தேவையான நிதி வளங்களை செலவிடுவது போன்றவற்றை சிபார்சு செய்து அமைச்சரவைக்கு தெரிவிக்கும் படியும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்.

### சிந்தனைக்கு..

என்னைப் பொறுத்தவரை எந்த ஒரு அரசியற் கட்சியும் இன்னொரு அரசியற் கட்சியைப்போல்தான் இருக்கின்றது: அதிலும் குறிப்பாக அதிகாரத்தில் உள்ள அரசியற்கட்சி.

-நார்மன் இன்ஸ்பரி


# ஈழநாதம்

61, ஐகேந்திர வீதி, யாழ்ப்பாணம் 28-09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்-05


## தேர்தலின் முன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கிலுள்ள தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவது குறித்து இரண்டு பிரதான போட்டியாளர்களும் குறியாகவே இருப்பதாகத் தெரிகின்றது; இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் அவர்கள் அக்கறையாகவே உள்ளனர்.

இந்த வகையில் சந்திரிகா குமாரதுங்காவிற்கு வடக்கில் பிரசார ஏற்பாடுகளைக் கவனிக்கவென பொது ஜன ஐக்கிய முன்னணி குழு ஒன்றையும் அமைத்துள்ளது. இதே போன்றே ஐ.தே.க வேட்பாளர் காமினி திசாநாயக்காவும் வடக்கில் தேர்தல் பிரசாரம் நடத்துவதற்கென தனது நெருங்கிய நண்பர்கள் கொண்ட குழு ஒன்றை உருவாக்கியுள்ளதோடு அதன் மூலம் முயற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன.

இவர்களின் திட்டத்தின்படி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவது குறிக்கோளாகும். இதற்கு ஏற்றால் போல் விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் அனுமதி பெற்றுவிட வேண்டும் என்பதிலும் அவர்கள் கவனம் செலுத்துவதாகத் தெரிகின்றது.

அத்தோடு இவ்விடயத்தில் இருதரப்பினரும், நேரடியாக இல்லாதுவிட்டாலும் சில முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர் என்றே கூறலாம்; இதற்கு ஏற்றால் போல் தமது 'கொள்கைப் பிரகடனங்களையும்' வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

ஐ.தே.க. வேட்பாளரான காமினி திசாநாயக்கா, 'இனப்பிரச்சினை இல்லை என்று எவரும் கூற முடியாது. நாட்டில் இன்றுள்ள மிகப்பெரிய நெருக்கடியே இனப்பிரச்சினை தான்' எனத் தெரிவித்துள்ளதோடு அதற்குத் தீர்வு காணும் வழிமுறைகள் சிலவற்றையும் கூறியுள்ளார்.

காமினி திசாநாயக்காவின் இந்நிலைப்பாடானது, ஐக்கியதேசியக்கட்சியின் கடந்தகால கொள்கைகளில் இருந்து மாறுபட்டதாகும். ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது எனக் கூறி வந்தார். இந்த வகையில் காமினியின் அறிவிப்பு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை குறியாகக் கொண்டுள்ளமை தெளிவாகவே வெளிப்படுகின்றது.

இதேசமயம் பிரதமரும் பொ.ஐ.மு. வேட்பாளரு...

## சாகரவர்த்தனா மூழ்கடிப்பு மன்னாரில் ஏற்படுத்திய பதற்றம்

### படையினரை முகாம்களுக்குள் முடங்கவும் உத்தரவு

(மன்னார்)

கற்பிட்டி கடற்பரப்பில் கடற்கரும்புலிகளால் தகர்க்கப்பட்ட சாகரவர்த்தனா கப்பலிலிருந்து தப்பிய மூன்று மாலுமிகள் மன்னார் தீவை நீந்தி வந்தடைந்ததாகவும் இதனையடுத்து கடற்படையினர். அங்குள்ள தமிழ் மக்களின்மேல் தாக்குதல் நடத்த முயற்சித்ததாகவும் மன்னாரிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

மேற்படி மாலுமிகள், மன்னார் தீவை வந்தடைந்ததை தொடர்ந்து, மேலதிக இராணுவத்தினரும், கடற்படையினரும் மன்னார் தீவுக்கு வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டன.

இராணுவத்தினரும், கடற்படையினரும், முகாம்களுக்குள்ளேயே இருக்கும்படி உத்தரவிடப்பட்டதுடன், மன்னார் தீவின் பாதுகாப்புக்கு கப்டன் தயானந்த என்னும் அதிகாரி உடனடியாக மேலதிகமாக நியமிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## கடவத்த பொலிஸ் நிலையம் கனேமுல்ல படையினரால் முற்றுகை

### -விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

கடவத்த பொலிஸ்நிலையத்தை சேர்ந்த பொலிசாருக்கும், கனேமுல்ல அதிரடிப் படை முகாமை சேர்ந்த படையினருக்கும் இடையே இடம் பெற்ற மோதல் தொடர்பாக விசாரணைநடத்த உயர்மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கனேமுல்ல அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த இருவரை கடவத்த பொலிசார் தடுத்து வைத்ததையடுத்து கனேமுல்ல அதிரடிப்படை முகாமை சேர்ந்தவர்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்கும்படி கோரியுள்ளனர்

எனினும் கடவத்த பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி எஸ் ஐ.பெரேரா தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இந்த இருவரும் கடவத்த பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு இருந்தனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து படையினரின் வாகனம் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாக கூறி அதனை அப்புறப்படுத்த போக்குவரத்து பொலிஸ் உத்தரவு இட்டது பொலிசாரின் உத்தரவுக்குப் பணிய படையினர் மறுத்ததை தொடர்ந்து வாக்குவாதம் ஏற்பட்டு அது மோதலாக மாறியது. அப்போது ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் படையினரின் வாகனத்தில் வந்த இருவரைக் கைது செய்தனர் மற்றும் இருவர் தப்பியோடிவிட்டனர். இவ்வாறு பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காகவே இரவு ஒன்பது மணியளவில் படையினர் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். எனினும் இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகள் தலையிட்டதை தொடர்ந்து நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. இதுபற்றி விசாரணை நடத்துவதற்கு உயர் மட்டக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## சமாதான முயற்சிகளை குழப்ப பலர் முயற்சி

### லங்காதீப பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு, முன்னாள் பிரதமர் எஸ்- டபிள்யூ- ஆர்- டீ- பண்டாரநாயக்காவின் சிந்தனைகளின் அடிப்படையில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என லங்காதீப தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது-

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பிரச்சினையைத் தீர்க்க எடுத்து வரும் முயற்சிகளை பலர் குழப்ப முற்படுவதாகவும், இதற்கு பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா பலியாகி விடக்கூடாதெனவும் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

## சொந்தப் பணத்திலிருந்தே குற்றம் கட்டச் சிபார்சு

(கொழும்பு)

சட்ட விரோத நடவடிக்...

ஒரு பகுதி விரைவில் நடைமுறைக்கு வரும் வகையில்...

## பொன் விழா கட்டுரைப் போட்டி

(பருத்தித்துறை)

வட - இந்து மகளிர் கல்லூரி பொன் விழாவையொட்டி பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவ மாணவிகளுக்கிடையே நடாத்தப்படவுள்ள பொன்விழா கட்டுரைப் போட்டிகள் நாளை பி. ப. 2. 30 மணிக்கு வட - இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப் பொன் விழா கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்...

## எரிபொருள் விலைகுறைப்பு சுற்றாடலை பாதிக்குமா?

### ஆராய அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

பெற்றோல், டீசல் மற்றும் எரிபொருட்களின் விலையைக் குறைப்பது சுற்றாடலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது பற்றி ஆராயும்படி போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் சுற்றுப்புற சூழல்பாதுகாப்பு அமைச்சர் திருமதி சிறிமானி அத்துலத்முதலிபணிப்புரை விடுத்துள்ளார்

அவர் மேலும்குறிப்பிடுகையில் சுற்றாடலுக்கு மாசுஏற்படுத்துவதில் வாகனங்களின் புகை முக்கிய பங்கை வகிக்கிறது. எரிபொருட்களின்விலைகள் குறையும்போது வாகனப் பாவனையும் அதிகரிக்கும். இவற்றை கருத்திற்கொண்டே இந்தப் பணிப்புரையை விடுத்திருப்பதாக தெரிவித்தார்

## லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு ஐ தே. க ஆதரிக்குமா?

(கொழும்பு)

லஞ்ச ஒழிப்பு தொடர்பாக நிரந்தர ஆணைக்குழு நிறுவப்படுவதற்கு வகை செய்யும் சட்ட மூலத்தை ஆதரிப்பது பற்றி ஐ. தே. க. இன்னமும் எந்த முடிவையும் செய்யவில்லை எனத் தெரிய வருகிறது.

இது பற்றி கட்சியின் பொதுச் செயலாளரான டாக்டர் காமினி விஜேசேகரா கூறுகையில், 'நாங்கள் இந்த சட்ட மூலத்தை படித்துக் கொண்டிருக்கிறோம். லஞ்சம் மற்றும் ஊழல்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவாகவே நாம் எப்போதும் இருக்கிறோம். எனினும் இது சட்டத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை கவனமாகஆராய வேண்டியுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி விஜேதுங்க பதவி துறந்திருக்க வேண்டும்

### - பாலாதம்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் ஐ தே. க. அடைந்த தோல்வியைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதி டி. பி விஜேதுங்க தமது பதவியை துறந்திருக்க வேண்டும். இவ்வாறு பொதுத் தேர்தல் முடிவும் ஜனாதிபதி முறையும் என்ற தலைப்பில் வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாலா தம்பு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசியலமைப்பின் 38(1) வது பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் அவர்தனது பதவியைத் துறந்திருப்பாரேயானால் அரசியலமைப்பின் 40(1) (சி) பிரிவின் படி புதிய பிரதமர் ஜனாதிபதி பதவியில் பிரதம மந்திரி பதில் கடமையாற்ற நேர்ந்திருக்கும் அதன் மூலம் அரசாங்கத்தின் பரிபூரண கட்டுப்பாட்டினை புதிய பிரதமர் பெற்றுக் கொள்ள ஏதுவாக இருந்திருக்கும். ஆனால் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அவ்வாறு செய்ய தவறியது மட்டுமன்றி பாதுகாப்பு அமைச்சையும் தொடர்ந்து தம் வசம் வைத்துக் கொண்டுள்ளார். அதன் மூலம் அரசின் ஆயுதப் படைகளையும், பொலிசையும் கட்டுப்படுத்தும் உரிமையை புதிய அரசிற்கு வழங்க அவர் மறுத்துள்ளார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## புலிகளின்ஊடுருவல்களால் படையினரிடையே பதற்றம்

(மன்னார்)

விடுதலைப் புலிகள், மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்குள் நடத்திவரும் கொமாண்டோ தாக்குதல்களை அடுத்து மன்... கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் படையினர் பெரிதும் பதற்றமடைந்திருப்...

தமிழ் மக்களின் வாக்குகளை குறியாகக் கொண்டுள்ளமை தெளிவாகவே வெளிப்படுகின்றது.

இதேசமயம் பிரதமரும் பொ.ஐ.மு. வேட்பாளருமான சந்திரிகா குமாரதுங்கா இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்த ஒரு மாத கால ஆட்சியில் ஏற்பட்ட முன்னேற்றத்தைத் தளமாகக் கொண்டு வாக்கு வேட்டைக்குக் குறி வைப்பதாகத் தெரிகின்றது. சமாதானம் தொடர்பான அறிவிப்புக்கள், சில பொருள்கள் மீதான தடை நீக்கம் என்பன உருவாக்கியுள்ள நல்லெண்ண உணர்வை ஜனாதிபதித் தேர்தல் வாக்கு வேட்டைக்கான மூலதனமாக அவர் மாற்ற முற்படலாம்.

ஆனால் இவர்கள் மேற்கொள்ளும் சமாதான முயற்சி பற்றிய அறிவிப்புக்கள், தமிழர் பிரச்சினைக்கான அங்கீகாரம் என்பன ஜனாதிபதித் தேர்தலை வடக்கில் நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கும் என்று கூறிவிட முடியுமா? ஏனெனில் இவர்களின் அறிவிப்புக்கள் எவையும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியாது என்பதை மக்கள் தெளிவாகவே உணர்ந்துள்ளதே காரணமாகும்.

கடந்த 17 வருட காலம் ஐ.தே.கட்சி ஆட்சி செய்த போதும் -நீண்டகாலம் காமினி திசாநாயக்காவும் ஆட்சியில் அங்கம் வகித்தார். அவர்களால் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக் காண முடியவில்லை. மாறாக அந்நிய இராணுவ உதவி பெற்றாயினும் அடக்குமுறையைத் தொடரவே அவர்கள் விரும்பினார்கள். இதன் காரணமாக தமிழ் மக்களுக்கு அவர்கள் இழைத்த அநீதிகள் ஏராளம். இதைக் காமினியின் பத்திரிகை அறிவிப்புக்களினால் மறைத்து விடச் செய்ய முடியாது.

இதேசமயம் புதிதாகப் பதவி ஏற்றுள்ள அரசாங்கமும் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு எனக் கூறிக் கொள்கின்றதே ஒழிய அதில் பெரும் முன்னேற்றம் கண்டுவிட்டதாகத் தெரியவில்லை. மாறாக இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளது. இதனால் முன்னைய ஆட்சிபோன்றே பொதுமக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. சமாதானத்தின் மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கையும் குலைந்துபோய் விட்டது.

இந்நிலையில் ஏதோ ஒரு சில அறிவிப்புக்களுடனும், சிறிய செயற்பாடுகளுடனும், வடக்கில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடலாம். மக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி வாக்குகளைத் தமக்குப் போடுவார்கள் என எதிர்பார்ப்பது தவறாகும். தமிழ்மக்களைப் பொறுத்து இன்று அவர்களுக்குத் தேவையானது கௌரவத்துடன் கூடிய சுதந்திரம், பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தும் அரசியற்தீர்வே ஆகும். அதன் பின்பே மற்றவை, ஆகையினால் இப் பிரச்சினைகளைத் தீர்க்கும் துணிவு கொண்டவர்கள் மட்டுமே எதிர்காலத்தில் தமிழ் மக்களிடம் வாக்கு வேட்டைக்கு வரலாம், மக்கள் அபிமானத்தைப் பெறலாம். அதுவே இன்றைய அரசியல் கள நிலைவரமாகும்.

(கொழும்பு)

சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக நீதிமன்றத்தால் விதிக்கப்படும் தண்டப் பணத்தை பொலிசார் இனிமேல் தமது சொந்தப் பணத்திலிருந்தே செலுத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதே வேளை அடிப்படை உரிமை மீறல் போன்ற சில சம்பவங்கள் தொடர்பாக மட்டும் குற்றப்பணத்தை வழமை போல திணைக்களம் செலுத்த முடியும்.

இவ்வாறு நிதி சீராக்கல் தொடர்பானசமிட்டி சிபார்சு செய்துள்ளது. நிதி சீராக்கல் தொடர்பான சிபார்சுகளின் ஒரு பகுதி விரைவில் நடைமுறைக்கு வரும் வகையில் அடுத்த மாதத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளது.

இதே வேளை செல் -டெல் தொலைபேசி, குளிர்சாதன வசதி போன்ற ஆடம்பர வசதிகளை திணைக்களங்களில் ஏற்படுத்துவது பற்றி இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை தொடர்பாக திணைக்கள தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் ரத்து செய்யப்பட்டு அவை அமைச்சு செயலாளர்களின் முடிவுக்கு விடப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 60 வயது கடந்தவர்கள் பதவி பறிக்கப்படவுள்ளது

- அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

அறுபது வயதை கடந்த சகலரையும் ஒருமாத சம்பளத்துடன் வெளியேற்றப்போவதாக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள், கூட்டுறவு துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில், தமது அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், மற்றும் ஏனைய பகுதிகளில் கடமையாற்றுபவர்களில் அறுபது வயதைக் கடந்த சகலரையும் வெளியேற்றப்போவதாகவும் இதனால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அடுத்த வருடத்திற்கு முன்னர் இத்திட்டம் பூர்த்தி செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

# மன்னாரில்உணவுப்பஞ்சம் மக்கள் பெரும் பாதிப்பு

மன்னார் தீவுப்பகுதி மக்கள் பேர் உணவு பஞ்சத்தை எதிர் நோக்குகின்றனர். இதனால் மக்கள் பெரிய பாதிப்புக்குள்ளானதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கற்பிட்டி கடலில் சாகரவர்த்தனா கப்பல் தாக்கப்பட்டதை தொடர்ந்து கற்பிட்டி மன்னார் கடல் மார்க்க போக்குவரத்து படையினர் பெரியளவு மட்டுப்படுத்தியதை தொடர்ந்து உணவுத் தட்டுப்பாடு அப்பகுதியில் காணப்படுவதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றது.

மன்னார் தீவில் விடுதலைப் புலிகளின் அதிரடி தாக்குதலைத் தொடர்ந்து வர்த்தக நிலையங்களின் கையிருப்பிலுள்ள பொருட்கள் படையினர் மட்டுப்படுத்தியதினால் வர்த்தக நிலையங்களின் உணவுப் பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்டமை இவ் உணவுப் பஞ்சத்திற்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. [நி]

பெறவுள்ளது. இப்போன விழா கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பித்த சகல பாடசாலைகளினதும் மாணவ, மாணவிகளை 29-9-94 பி.ப. 2.30 மணிக்கு பாடசாலையில் சமுகமளிக்கச் செய்யுமாறு சகல அதிபர்களையும் வட- இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச்சபை கேட்டுள்ளது. (25)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-09 28 புதன் இரவு

08-01 - குயிலோசை - நிகழ்ச்சியில் சொக்கன் அவர்கள் எழுதிய ''மானத் தமிழ் மறவன்'' சங்கிலியன் கூத்தில் 3-ம் பகுதி

08 20 - ஒப்பறேஷன் யாழ் தேவி இராணுவ நடவடிக்கை நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - கபிலன் எழுதிய ''தடம் புரண்ட யாழ் தேவி''

08-30 - செய்திகள்

08-40 - நாடகம் - செந்தமிழ்க் கீரன் எழுதிய ''தண்ணீர்''

### 1994-09 29 வியாழன் காலை

07-02 - மாவீரவணக்கம்

07-15 - விடுதலை கீதங்கள்

07-30 - செய்திகள்

07-35 - பத்திரிகைச் செய்திகள்

07-40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

பாட்டு பிரதேசங்களுக்குள் நடத்திவரும் கொமாண்டோ தாக்குதல்களை அடுத்து, மன்னார் நகரமெங்கும் இராணுவத்தினர் தங்கள் காவலரண்களை பலப்படுத்தி வருவதாக அங்கிருந்து எமக்கு கிடைக்கு தகவல்கள் படையினர் பெரிதும் பதற்றமடைந்திருப்பதாகவும், அடிக்கடி சோதனைகளை மேற்கொள்வதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (நி)

# இ.தொ.கா அரசை ஆதரிப்பது எம்மைப் பாதிக்காது

- சந்திரசேகரன்

(கொழும்பு)

இ. தொ. காவை அரசியல் ரீதியாக நாம் விமர்சிக்கிறோம். எனினும் அதன் செயற்பாடுகள் நாம் எதிர் பார்க்கும் வகையில், அமையும் போது நாம் அதனைப் பாராட்டவும் தயங்கமாட்டோம். எனினும் இ தொ.கா. பொது ஜனஐக்கிய முன்னணி அரசை ஆதரிக்க முன்வருவதால் எமது செல்வாக்கில் எந்தப் பாதிப்பும் நேரப் போவது இல்லை. இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், வர்த்தக வாணிபத்துறை பிரதி அமைச்சருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வரும் வார இதழ் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில், பாராளுமன்ற அங்கத்தவர் பதவி இல்லாத போதும் எவ்விதம் எமது மக்களுக்காக அரசியல் நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும் என்பதை ஏற்கனவே திட்டமிட்டுள்ளோம்.

மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில், இந்த அரசாங்கத்தில் இணைந்துள்ள தனித்தமிழ் அரசியல் கட்சி என்ற வகையில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வுக்கு எமது பங்களிப்பை செலுத்த தயாராகவுள்ளோம். அவசியமானால் அந்த பேச்சு வார்த்தைகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளவும் தயாராக உள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

# பாடசாலை கொட்டகை விரைவில் திருத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் பாடசாலையின் சேதமடைந்த கொட்டகைகள் விரைவில் திருத்தம் செய்யப்படவுள்ளன. அதிபர் அலுவலகம் மற்றும் உயர்நிலை வகுப்புகள் இயங்கும் கொட்டகை ஆகிய இரண்டும் அண்மையில் வீசிய பலத்த காற்றினால் கூரை பெயர்ந்து பலத்த சேதம் அடைந்துள்ளதாகவும், கல்வித் திணைக்களம் வழங்கியுள்ள கல்நார்த் தகடுகளினால் கூரையிடப்பட்டு இவை திருத்தம் செய்யப்படும் என்றும் இவ் வேலைத்திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொள்ளவுள்ளதாகவும் பிரஸ்தாப பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, நாரந்தனை கணேச வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் இணைந்து இக்குடியிருப்பில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (22)

## லெப் கேணல் சுபன் நினைவு பாலர் பாடசாலை திறப்பு

லெப். கேணல் சுபனின் 2-ம் ஆண்டு ஞாபகார்த்தமாக பாலர் பாடசாலை ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. மன்னார் மாவட்டம், பூநகரி வட்டத்தில் தெழிவரை கிராமத்தில் அமைக்கப்பட்ட இப் பாலர் பாடசாலையின் திறப்பு விழாவில் மங்களவிளக்கை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் அல்வினும், பள்ளிக்குடா கிராம சேவையாளரும் ஏற்றி வைத்தனர். தேசியக்கொடியை பூநகரி வட்டப்பொறுப்பாளர் சுகின் ஏற்றி வைத்தார். பாலர் பாடசாலையை பிரதேசப் பொறுப்பாளர் விதியவன் திறந்து வைத்தார். பெயர்ப் பலகையை பூநகரி வட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி யாழிசை திரை நீக்கம் செய்து வைத்தார். இந்நிகழ்வுகளைத்தொடர்ந்து விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றது.

## ஒக்டோபர் 14 முதல் உலக தமிழ் தொலைக்காட்சி

(கொழும்பு)

ஜேர்மன் நாட்டின் பெர்லின் நகரில் அடுத்த மாதம் 14-ம் திகதி உலக தமிழ்த் தொலைக் காட்சி ஆரம்பமாகவுள்ளது. இது ஆசியசேவை', ஐரோப்பிய சேவை என இரண்டு பிரிவாக தொழிற்படும்.

இலங்கையில் சாதாரண "ஹெலிக்கல்" அன்டனா மூலம் இந்நிகழ்ச்சிகளை பார்க்கமுடியும். இந்நிகழ்ச்சிகளில் உலகச் செய்திகள் தமிழில் இடம்பெறும். லண்டன், ராய்ட்டர் செய்தி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் உலகச் செய்திகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூரியகந்த எலும்புத்துண்டு மனித உடலின் பாகங்களே

சூரியகந்த பகுதியில் இரண்டாவது முறை புதைகுழிகள் தோண்டப்பட்ட போது கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புகள் தொடர்பாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பாக பிரதம சட்ட வைத்திய அதிகாரி அல்விஸ் தகவல் தருகையில், இவ் எலும்புகள் மனித எலும்புக் கூட்டின் பாகங்களே என்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், எலும்புக்குரியவர்களின் வயது, அவர்கள் மரணித்த காரணம், ஆண்களா? பெண்களா? என்பன போன்ற விடயங்களை அறிந்து கொள்வதற்கென விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இப் புதைகுழியின் மண்ணும் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

## காயமடைந்த படையினருக்கு வெளிநாடுகளில் சிகிச்சை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் காயமடையும் படையினருக்கு வெளிநாடுகளிலுள்ள நவீன மருத்துவமனைகளில் சிகிச்சை அளிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடையும் படையினருக்கு விசேட சலுகைகளும் வழங்கப்படுமெனவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

## ரோகணவின் மனைவியை விடுவிக்க ஜனாதிபதி விஜேதுங்கா சம்மதம்

(கொழும்பு)

ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் றோஹண விஜேவீராவின் மனைவியையும் பிள்ளைகளையும் விரைவில் விடுவிப்பதாக, ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தன்னிடம் உறுதியளித்திருப்பதாக றோஹண விஜேவீராவின் மைத்துனரும், ஜே.வி.பி ஜனாதிபதி வேட்பாளர் எனக் கருதப்படுபவருமான டாக்டர் சந்திரா பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இது தொடர்பாகத் தான் ஜனாதிபதியைச் சந்தித்ததாகவும், இச்சந்திப்பில் பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாச ஆகியோரும் கலந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்தபோது அவசரகாலச் சட்டத்தின் கீழ், கட்சியில் இருந்த ஐம்பத்தியெட்டுகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை அரசுடமையாக்கியவற்றை மீளவும் கட்சியிடம் ஒப்படைக்க ஜனாதிபதி இணங்கியிருப்பதாகவும் சந்திரா பெர்ணாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியிடம், அரசியல் நிலைமைகளை ஆராய்ந்ததாகவும் தற்போது கட்சிக்குள் செயலாளர் பதவிக்கு எழுந்துள்ள இழுபறி நிலையைத் தீர்க்க, றோஹணவிஜேவீராவின் மனைவியான தனது தங்கையின் வாக்குமூலத்தை பெறவேண்டியதையும் எடுத்துரைத்ததாகவும் அவர் தெரிவித்தார்,

இதேவேளை, டாக்டர் சந்திரா பெர்ணாண்டோ குறிப்பிடுவது போலான எச்சந்திப்பிலும் தான் கலந்து கொள்ளவில்லை என ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாசா தெரிவித்துள்ளார்,

### மா, மண்ணெய் விலை குறைப்பினால்

## கூட்டுறவு சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டம்பற்றி அதிகாரிகளுக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

அரசின் விலைக்குறைப்பினால் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களிற்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாகவும் அவற்றின் தேவைகள் தொடர்பாகவும் கூட்டுறவுச் சபைத்தலைவர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு கூட்டுறவு அமைச்சு அதிகாரிகளுடன் பூர்வாங்க பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

அண்மையில் சிறிலங்கா அரசினால் கோதுமை மா, மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களிற்கான விலைகள் குறைக்கப்பட்டது தெரிந்ததே,

இதனால் இப் பொருள்களை கையிருப்பில் வைத்திருந்த கூட்டுறவுச் சங்கங்கள் நட்டமடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இந்த நட்டப்பொறுப்பு தொடர்பாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு சில முயற்சிகளை எடுத்திருந்தபோதும் அது பயன் அளிக்கவில்லை,

இதனைத் தொடர்ந்து கொழும்பு சென்றுள்ள யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இது தொடர்பாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அதிகாரிகளுடனும் கூட்டுறவு அமைச்சு அதிகாரிகளுடனும் பூர்வாங்க பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளார். இப் பேச்சு வார்த்தையின்போது யாழ். அரச அதிபரும் உடன் இருந்ததாக தெரியவருகிறது.

இதன் பயனாக தலைவர், விலை குறைப்பு செய்யப்பட்ட பொருட்களின் கையிருப்பு விபரங்களைப் பெற்று உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறும் அத்துடன் கூட்டுறவுச் சங்கங்களிற்கு தேவையான பற்றறி, இயந்திர உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் விபரங்களையும் பெற்று உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறும் கொழும்பில் இருந்து கூட்டுறவுச் சபைக்கு அவசர தகவல் அனுப்பியுள்ளார்,

இதைத் தொடர்ந்து கூட்டுறவுச் சபை மேற்படி தகவல்களை உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களை சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளது. (88)

---

கடற்படை

(20) என்பவர் கடலில் பலியாகி சடலமும் கடலில் கைவிடப்பட்டது. மேலும் கொட்டடியைச் சேர்ந்த இரத்தினம் முரளிதாசன் (16) என்பவரது சடலம் மீட்கப்பட்டது.

மற்றும் மத்தியாஸ் ரவிக்குமார் (18) என்பவர் கையில் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

---

சிறிமானியின்

என்றும் அவர் தமது அமைச்சுக்கு உகந்தவர் என்றும் செயலாளராக நியமனம் செய்யும்படி பிரதமரைக் கோரியிருந்தார்.

குறிப்பிட்ட முன்னாள் செயலாளர் டீமெல் ஓய்வு பெறும்

---

கூடற்

அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், செம்பியன்பற்று தனிப்பனை முகாம், செம்பியன்பற்றுச்சந்தி, மாமுனைச் சந்தி, குடாரப்பு கொன்வென்ரடி, நாகர் கோவில் மகாவித்தியாலயம் வழியாக, இன்பன் ஆஸ்பத்திரியடி, அம்பன் பாடசாலையடி, நடுக்குடத்தனை, மணற்காடு, கற்கோவளம் விளையாட்டு மைதானம், முனை தேவாலயம் வழியாக, சுப்பர்மடம், இன் பருட்டி விளையாட்டுக் கழகம்

அஞ்சலியும் நடைபெற்று எழுதுமட்டுவாள் சந்தியை வந்தடையும் [6.00மணிக்கு] அங்கு 6.00 மணியிலிருந்து 6.15 மணிவரை கூட்டமும் மக்கள் அஞ்சலியும் நடைபெற்று தொடர்ந்து 7.00 மணிக்குமுகமாலைச்சந்தியை வந்தடைந்து அங்கு 7.00 மணியிலிருந்து 7.15 மணி வரை கூட்டமும் மக்கள் அஞ்சலியும் நடைபெற்று தொடர்ந்து 8.00 மணியளவில் வேம்பொடுகேணி சந்தியை வந்தடைந்து அங்கு 8.00

ஊர்தி அடையும்,

ஊர்தி பவனியில், 9-10 மணிக்கு அரியாலை ச. ச. நிலையத்திலும், 9-40 மணிக்கு கொழும்புத்துறை சந்தியிலும், 10-25 மணிக்கு குருநகர், ச. ச. நிலையத்திலும், 11-10 மணிக்கு வில்லூன்றி பிள்ளையார் கோவிலடியிலும், 12-10 மணிக்கு ஆனைக்கோட்டை சந்தியிலும், 1-10 மணிக்கு சங்கரத்தை சந்தியிலும், 2 மணிக்கு வட்டுக்கோட்டை சந்தியிலும், 3-15 மணிக்கு சித்த

---

## மரண அறிவித்தல்கள்

### இ. கோவிந்தசாமி

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் அரச வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய தவில் வித்துவான் திரு. கோவிந்தசாமி 27-9-94 அன்று காலமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும், பரமசிவம் [ஜேர்மனி), காலஞ்சென்ற கோபால கிருஷ்ணனின் தந்தையும், நவநீதரட்ணம், (ஜேர்மனி), ஜெயவதனி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சின்னராசா (தவில்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சண்முகராசா, காலஞ்சென்ற சண்முகநாதன், பெரியபொண்ணு ஆகியோரின் சகோதரரும், ரவீந்திரன், சுதாகரன், பிரசாத், காயத்திரி, கஸ்தூரி, காலஞ்சென்ற கஜேந்திரன். உமையவன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இலக்கம் 31, அரச வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 3 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(9536) திருமதி கோவிந்தசாமி, (நல்லம்மா)

### திருமதி அரியகுட்டி தெய்வானை

மணற்பகுதி புத்தூரைச் சேர்ந்த தெய்வானை காலமாகி விட்டார். இவர் அரியகுட்டியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைரவன் (விசும்பன்) குழந்தை ஆகியோரின் அன்பு மகளும், பரஞ்சோதி, திருமதி சந்திரவதனி அருந்தவம், திருமதி தங்கராசா சந்திரவிம்பம், திருமதி சந்திரதேவி செல்வயோகநாதன், பஞ்சமூர்த்தி, பரமலிங்கம், சந்திரலேகா, பவானந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும், சி. அருந்தவம், க. தங்கராசா, வே. செல்வயோகநாதன், காலஞ்சென்ற திருமதி லீனா பரஞ்சோதி ஆகியோரின் மாமியும், நர்மதா, தார்மிகன், கஸ்தூரி, கோபிநாத், கீர்த்திகா, கோபிகீதன், கௌதமி, காயத்ரி, பூங்கோதை ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29 09 94-ல் நடைபெற்று தகனக்கிரியைக்காக குடும்ப மயாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

மணற்பகுதி புத்தூர் (9526) அ. பரஞ்சோதி (மகன்)

### வெற்றிவேலு சுந்தரராஜா

(Retired O. A., Co-Operative Bank, Jaffna)

வெற்றிவேலு சுந்தரராஜா (ஓய்வுபெற்ற யாழ். கூட்டுறவு வங்கி O. A.) நேற்று (27-9-94) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாயாதேவியின் கணவரும், ப. நடராஜா (Ret A.C.C.D and Ret Personal

காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். பரமசிவம் சுரேஸ்குமார் (16) என்பவரும் சிறுகாயமடைந்தார்.

இவர்கள் எடுத்துச் சென்ற கட்டுமரமும் சேதமடைந்தது மத்தியாஸ் ரவிகுமாருடன் தொழிலுக்குச் சென்ற அவரது தந்தையார் ஆபத்து இன்றி தப்பி வந்துள்ளார்.

(யோ)

---

### யுத்த

புலிகளின் தாக்குதல்கள் யுத்த நிறுத்தமொன்றின் அவசியத்தை உணர்த்தியிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

---

### வடக்கு

தெரிவிக்கின்றன.

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஆகிய மாவட்டங்களுக்கு புதிய அரசாங்க அதிபர்களை நியமிக்கும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும். மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கான அரசாங்க அதிபர்கள் இதே தரத்தில் வேறிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படலாமெனவும் தெரியவருகின்றது.

இதேவேளை. யாழ்- அரசாங்க அதிபராக கா. மாணிக்கவாசகர் தொடர்ந்தும் சேவை நீடிப்பில் இருப்பதை அமைச்சரவை தனது தீர்மானத்தின் அடிப்படையில் நிராகரிக்க இருப்பதாகவும் நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த வருடம், செப்டம்பர் முதலாம் திகதிவரை, கா. மாணிக்கவாசகர் தொடர்ந்தும் யாழ், அரச அதிபராக கடமையாற்ற புதிய அரசாங்கம் பணிப்புரை விடுத்திருந்தும், அமைச்சரவையின் இறுதியான தீர்மானங்களின் அடிப்படையில், இச்சேவை நீடிப்பு நிறுத்தப்படலாமென அறியவருகின்றது.

குறிப்பிட்ட முன்னாள் செயலாளர் டீமெல் ஒய்வு பெறும் வயதை அடைந்திருப்பதனால் அவரை நியமனம் செய்ய முடியாது என பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

(தி, பா)

---

### பிரச்சினை

அவர் அளித்துள்ள பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். சமாதான முயற்சிகள் பற்றி மேலதிக கருத்துக்கள் எதையும் கூற நான் விரும்பவில்லை. சாதாரண பொதுமகன் 'என்ற நோக்கிலேயே இம்முயற்சிகளை வரவேற்க நான் தயாராக இருக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

---

இதேவேளை, கா. மாணிக்கவாசகரின் சேவை நீடிப்பு இரத்தாகும் பட்சத்தில், அரச அதிபர் பதவிக்கு. யாழ்ப்பாணத்திலுள்ள உயர் அரச அதிகாரிகள் மத்தியில் பெரும் போட்டி எழுந்துள்ளதை அவதானிக்க முடிவதாக செயலக வட்டாரங்களில் அறியவருகிறது.

சில உயரதிகாரிகள் மேற்படி பதவியைப் பெறும் நோக்கில் கொழும்பு நோக்கி படையெடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது-

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி, இவ்வருடம் டிசம்பர் மாதம் வரை தொடர்ந்தும் கா- மாணிக்கவாசகர் அரசாங்க அதிபராக சேவை நீடிப்பு பெறுவார் என கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன-

[தி] ]பா]

---

### போரதீவு

யாற்றும் விசேட அதிரடிப் படைப் பிரிவு மற்றும் பொலிஸ் சேவை அதிகாரிகள் இவர்கள் மீது மேற்கொண்ட நடவடிக்கைகளின் அழுத்தத்தினால் இவர்கள் தப்பிஓடியதாக நடைபெற்ற விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது,

---

வழியாக, சுப்பர்மடம், இன்பருட்டி விளையாட்டுக் கழகம் சக்கோட்டை, பொலிகண்டிச் சந்தியூடாக செல்லும்.

நாகர் கோவில் மகா வித்தியாலயத்திலும், முனை தேவாலயத்திலும் நினைவுரைகள் இடம்பெறும்.

### தென்மராட்சிக் கோட்டம்

இன்று காலை 8.00 மணிக்கு நாவற்குழி சந்தியில் கூட்டமும், மக்கள் அஞ்சலியும் நடைபெற்று 9.00 மணிக்கு கைதடிச் சந்தியை வந்தடையும். அங்கு 9.30 மணிவரை கூட்டமும், மக்கள் அஞ்சலியும் நடைபெற்று 10.00மணிக்கு தேவகி குடியிருப்பை வந்தடைந்து அங்கு 10 15மணி வரை கூட்டமும். மக்கள் அஞ்சலியும் நடைபெற்று பின்னர் வைரவர் கோவிலடிச் சந்தியால் நுணாவில் சந்தியை வந்தடையும். அங்கு 11.00மணியிலிருந்து11.15மணி வரைகூட்டமும்; மக்கள் அஞ்சலியும் நடைபெறும். பின்னர் 12 00 மணிக்கு நுணாவில் 190-ம் கட்டையடியில் 12.00 மணியிலிருந்து 12 15மணி வரை கூட்டமும், மக்கள் அஞ்சலியும் நடைபெற்று 1.00மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்தை வந்தடையும். அங்கு 1.30மணி வரை தரித்து நின்று கூட்டமும், மக்கள் அஞ்சலியும் நடைபெற்று சங்கத்தானைஊடாக மீசாலை ஐயாகடையடிச் சந்திக்குவந்து அங்கு 2.15 மணியிலிருந்து 2.30 மணிவரை கூட்டமும், மக்கள் அஞ்சலியும் நடைபெறும்.

தொடர்ந்து மீசாலைச் சந்தியூடாக புத்தூர் சந்திக்கு 3.00 மணிக்கு வந்தடைந்து அங்கு 3.15மணிவரை கூட்டமும் மக்கள்அஞ்சலியும் நடைபெற்று பின்னர் 4.00 மணிக்கு கொடிகாமம் பஸ் நிலையத்தை வந்தடைந்து 4 15 மணிவரை கூட்டமும் மக்கள் அஞ்சலியும் நடைபெற்று மிருசுவில் சந்திக்கு 5 00மணிக்கு வந்தடையும். அங்கு 5.15 மணிவரை கூட்டமும் மக்கள்

வேம்பொடுகேணி சந்தியை வந்தடைந்து அங்கு 8.00 மணியிலிருந்து 8 15 மணி வரை கூட்டமும் மக்கள் அஞ்சலியும் நடைபெற்று பின்னர் 9.00 மணிக்கு பளை சந்தை மைதானத்திற்கு வந்து அங்கு 9.00 மணி தொடக்கம் 9.15 மணிவரை கூட்டமும் மக்கள் அஞ்சலியும் நடைபெறும்.

### வலிகாமம் கோட்டம்

வலிகாமம் கோட்டத்தில், கடற்கரும்புலிகளின் ஊர்திபவனி, காலை 9 மணிக்கு செல்லக்கிளியம்மான் குடியேற்றத் திட்டத்தில் ஆரம்பமாகும் ஊர்தி, கண்டிவீதியூடாக புங்கங்குளம் சந்தி, அரியாலை, புகையிரதநிலைய வீதியூடாக கொழும்புத்துறை வீதிச் சந்தி, கண்டிவீதியூடாக கடற்கரை வீதி, பாசையூர், குருநகர், 1-ம் குறுக்குத் தெரு, யாழ் மருத்துமனை வீதி, கொட்டடி வில்லூன்றி பிள்ளையார் கோவிலடி, நாவாந்துறை, அராலிவீதி, பொம்மைவெளியூடாக ஓட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை சந்தி நவாலிவீதி, சங்கரத்தை சந்தி, அராலித்துறை வீதி, வட்டுக்கோட்டைச் சந்தி, சித்தன்கேணி பிரதான வீதியூடாக மாவடிச்சந்தி மூளாய் வீதி, சுழிபுரம் வீதி, சுழிபுரம் சந்தி, சங்கானை வீதி, சுழிபுரம் சந்தி, சித்தன்கேணிச் சந்தி, சங்கானைச் சந்தியூடாக சிரணிச் சந்தி, மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோயிலடி யாழ். மானிப்பாய் வீதியூடாக சுதுமலை அம்மன் கோவில், தாவடிச் சந்தி, காங்கேசன்துறை வீதி, இணுவில் சந்தி, மருதனார்மடம் சந்தி, சுண்ணாகம் சந்தியை

க்கு வட்டுக்கோட்டை சந்தியிலும், 3-15 மணிக்கு சித்தன்கேணிச் சந்தி, மாவடிச் சந்தியிலும், 4-15 மணிக்கு சுழிபுரம் சந்தியிலும், 4-50 மணிக்கு சித்தன்கேணி சந்தியிலும், 5-25 மணிக்கு சிரணிச் சந்தியிலும். 6-15 மணிக்கு மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலடியிலும், 7 மணிக்கு தாவடிச் சந்தியிலும், 7-30 மணிக்கு மருதனார்மடம் சந்தியிலும் நினைவுரைகள் நடைபெறும்.

---

### நான்கு

கடலில் மூவரையும் கைது செய்தனர்.

குடத்தனை கடற் பகுதியில் கைது செய்யப்பட்ட பொற்பத்தையைச் சேர்ந்த நல்லையா - தேவன் (35)என்பவரை உடனேயே அதில் வைத்து விடுவித்தது. பின்னர் பருத்தித்துறை கடலில் கைது செய்யப்பட்ட கொட்டடியைச் சேர்ந்த சுப்பையா ராஜ்மோகன் (26), செல்லச்சாமி - சுகுமார் (20). அக்காச்சி - யேசுதாஸ் (23) ஆகியோரை படையினர் பிடித்து தமது படகில் ஏற்றி கண் கட்டிய நிலையில் காங்கேசன் துறைக்கு கொண்டு சென்றனர்.

இரண்டு மணித்தியாலயத்திற்கு பின்னர் படகு திரும்பி வந்தது. பருத்தித்துறைக்கு நேராக கடற்படைப் படகு தரித்து நிற்க மூன்று மீனவர்களும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டனர். பின்னர் கரைக்கு வந்து சேர்ந்தனர்.

(யோ)

யாழ். ஸ்ரீதரில்

## தமிழோசை

தினசரி பி, ப 4.00 மணி மாலை 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10.30, பி. ப. 4-00 மணி
மாலை 6 00 மணி

(சி-10415)

---

மானார்.

அன்னார் காலஞ்சென்ற சாயாதேவியின் கணவரும், ப. நடராஜா (Ret A.C.C,D and Ret Personal Manager Peoples Bank,Colombo)அவர்களின் அன்புச் சகோதரரும், கதிர்காமநாதன் (பதில் முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), உமாதேவி, ஜெயராஜா (ஒய்வுபெற்ற லிகிதர் புடைவை நெசவாளர் கூட்டுத்தாபனம்), விக்னராஜா (கனடா), குகராஜா (U.K.) ஆகியோரின் தந்தையும், சறோஜினிதேவி (ஒய்வுபெற்ற உத்தியோகத்தர், சிங்கர் கம்பனி), விக்கினேஸ்வரன் (உதவி பிராந்திய முகாமையாளர் யாழ். பிரதேச காரியாலயம் மக்கள் வங்கி), ரதி (ஆசிரியை யா/வண் நாவலர் ம. வித்தியாலயம்), கமலா, நிர்மலா ஆகியோரின் மாமனாரும், வாகீஸ்வரன், விநோதினி, பிரதாபன், பிரதீபன், வாணி,சாரசி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன் கிழமை (28-9-94) பிற்பகல் 3 00 மணியளவில் நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்: சு. கதிர்காமநாதன்
(மகன்)

முகவரி'
47, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[9537]

---

## வீரகத்தி கதிர்காமு

புலோலி கிழக்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், தற்போது நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி கதிர்காமு 27-09-94 செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம் (நீர்வேலி - கண்ணாடி தொழிற்சாலை), திருநாவுக்கரசு கணேஸ்வரன் (உள்ளகக் கணக்காய்வாளர், சேரன் பல்பொருள் வாணிபம் - யாழ்ப்பாணம்), உமாதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமலரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (28-09-94) காலை 10 மணிக்கு நீர்வேலி மயானத்தில் தகனக்கிரியை செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பழைய தபாற்கந்தோர்
ஒழுங்கை,
நீர்வேலி.

தகவல்:
க. கணேஸ்வரன்
(மகன்)
H. N. D. A. 4-ம் வருடம்
யாழ். தொழில் நுட்பக் கல்லூரி.

(9530)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி; 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்' பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது